


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 182 13.02.2026 வெள்ளிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 182 Friday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(13–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–1
பிறை: தேய்பிறை
திதி
ஏகாதசி பிற்பகல் 3.11 வரை
பிறகு துவாதசி
நட்சத்திரம்:
மூலம் மாலை 5.00 வரை
பிறகு பூராடம்
யோகம்
அமிர்த/சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி
எமகண்டம்
காலை 6.00 – 7.30 மணி.
சூலம் – தெற்கு.
நல்ல நேரம் :
காலை 9–10 மணி.
மாலை 4–5 மணி

மேஷம் ................சாந்தம்
ரிஷபம் ................தாமதம்
மிதுனம் ................திறமை
கடகம் .............. ஆளுமை
சிம்மம் ..................வாழ்வு
கன்னி ..................போட்டி
துலாம் ................. இன்பம்
விருச்சிகம் .............. பாசம்
தனுசு .......................வரவு
மகரம் ................. யோகம்
கும்பம் ............. பெருமை
மீனம் .....................சிறப்பு

# வங்காளதேசத்தில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு

## ஆட்சியை பிடிப்பது யார்?

**வங்காளதேசம்,பிப்.13:**

வங்காளதேச பாராளுமன்றத்தில் 299 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடக்கிறது.

நாடுமுழுவதும்பெரும்பாலான வாக்குச்சாவடிகளில் மக்கள் ஆர்வமுடன் வந்து வாக்களித்து வருகின்றனர்.

வங்காளதேசத்தில் நேற்று காலை 7.30 மணிக்கு பொதுத்தேர்தலில் வாக்குப்பதிவு தொடங்கியது. ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ப்புக்கு பிறகு 18 மாதங்களாக முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு செயல்பட்டு வந்த நிலையில் இந்த தேர்தல் கவனத்தை ஈர்த்துள்ளது. 350 தொகுதிகளை கொண்ட வங்காளதேச பாராளுமன்றத்தில் 299 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடக்கிறது.

ஒரு தொகுதியில் வேட்பாளர் மரணம் அடைந்ததால் அங்கு வாக்குப்பதிவு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 50 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கப்பட்ட இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் விகிதா சார முறையில் தேர்வு செய்யப்படும்.

தேர்தலில் தாரிக் ரகுமானின் வங்காளதேச தேசியவாத கட்சி தலைமையிலான கூட்டணிக்கும், ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி தலைமையிலான கூட்டணிக்கும் நேரடி போட்டி நிலவுகிறது. மேலும் சில கட்சிகளும் களத்தில் உள்ளன.

தேர்தலையொட்டி நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சுமார் 9.58 லட்சம் பாதுகாப்பு படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டனர். மொத்தமுள்ள 42,779 வாக்குச்சாவடி மையங்களில் 90 சதவீதம் கண்காணிப்பு கேமராக்கள்



பொருத்தப்பட்டிருந்தன.

தேர்தலில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக இருந்தது. குறிப்பாக தலைநகர் டாக்காவில் பல வாக்குச்சாவடிகளில் நீண்ட வரிசை காணப்பட்டது.

அதேபோல் நாடு முழுவதும் பெரும்பாலான வாக்குச்சாவடிகளில் மக்கள் ஆர்வமுடன் வந்து வாக்களித்து வருகின்றனர். டாக்கா-17 தொகுதியில் போட்டியிடும் வங்காளதேச தேசியவாத கட்சி தலைவர் தாரிக் ரகுமான் தனது வாக்கை பதிவு செய்தார்.

ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி தலைவர் ஷபிகுர் ரகுமான் வாக்களித்தார். தேர்தல் நேரத்தில் அசம்பாவிதம் நடைபெறாமல் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருந்தபோதிலும் சில இடங்களில் பிரச்சினை ஏற்பட்டன. போகுரா பகுதி வாக்குச்சாவடி அருகே பி.என்.பி கட்சியின் மாணவர் தலைவர் மிலோன் மியா கத்தியால் குத்தப்பட்டார்.

பரிசாலின் பாபுகஞ்ச் உபாசிலா பகுதியில் பணம் மற்றும் தேர்தல் சீட்டுகளுடன் திரிந்த 2 பேர் கைது செய்யப்பட்டனர். சில மாவட்டங்களில் ஓட்டுக்கு பணம் கொடுத்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

வாக்குப்பதிவு மாலை 4.30 மணிக்கு முடிவடையும். அதன்பின் உடனே வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. தேர்தலின் முழுமையான வெற்றி விவரம் நாளை தெரியவரும். மாணவர்கள் போராட்டத்தால் ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ந்த பிறகு நடக்கும் இத்தேர்தலில் யார் ஆட்சியை பிடிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

வங்காளதேச தேசியவாத கட்சி தலைவர் கலிதா ஜியா மறைவுக்கு அவரது மகன் தாரிக் ரகுமான் லண்டனில் இருந்து 17 ஆண்டுகளுக்கு பிறகு நாடு திரும்பி தேர்தலில் போட்டியிடுகிறார். அக்கட்சிக்கு ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி கடும் சவாலாக உள்ளது. ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி கூட்டணியில் ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ப்புக்கு காரணமாக இருந்த மாணவர் இயக்கம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தேர்தலுடன் 84 அம்ச ஜனநாயக சீர்திருத்தங்களை உள்ளடக்கிய 'ஜூலை தேசிய சாசனம் 2025' மீதான மக்கள் வாக் கெடுப்பும் நடைபெற்றது.

# அரசு, பள்ளி நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்துக்கு முன்னதாக வந்தே மாதரம் பாடல் இசைக்க உத்தரவு

**புதுடெல்லி,பிப்.13:**

அரசு மற்றும் பள்ளி நிகழ்ச்சிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு முன்னதாக தேசியப் பாடலான வந்தே மாதரம் கட்டாயம் இசைக்க வேண்டும். அப்போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

வங்கமொழி கவிஞர் பக்கிம் சந்திர சட்டர்ஜி கடந்த 1875-ம் ஆண்டு நவம்பர் 7-ம் தேதி வந்தே மாதரம் பாடலை இயற்றினார். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இப்பாடல் மிகப் பெரிய உத்வேகம் அளித்தது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு கடந்த 1950-ம் ஆண்டு ஜனவரி 24-ம் தேதி வந்தே மாதரம் தேசியப் பாடலாக அறிவிக்கப்பட்டது. இந்தப் பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதை மத்திய அரசு கொண்டாடி வருகிறது.

இந்நிலையில் வந்தே மாதரம் பாடலுக்கு புதிய விதிமுறைகளை மத்திய அரசு வகுத்துள்ளது. இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது: அரசு மற்றும் பள்ளி



நிகழ்ச்சிகளில் தேசிய கீதம் (ஜன கன மன) இசைக்கப்படுவதற்கு முன்னதாக தேசியப் பாடலான வந்தே மாதரம் கட்டாயம் இசைக்க வேண்டும்.

கடந்த 1937-ல் நீக்கப்பட்ட 4 வரிகள் உட்பட வந்தே மாதரத்தின் அனைத்து 6 சரணங்களும் பாடப்பட வேண்டும். இது 3 நிமிடம், 10 வினாடிகள் நீளமுடையதாக இருக்கும். குடியரசுத் தலைவர், ஆளுநர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், பத்ம விருதுகள் உள்ளிட்ட அரசு விருது வழங்கும் நிகழ்ச்சிகள், தேசியக் கொடி ஏற்று தல் போன்ற அதிகாரப் பூர்வ நிகழ்ச்சிகளில் தேசியப் பாடல் பாடப்பட வேண்டும்.

வந்தே மாதரம் பாடும் போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும். தேசியப் பாடல் பாடப்படும் சபை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். வந்தே மாதரம் பாடும் போது அல்லது இசைக்கப் படும் போது, பார்வையாளர்கள் எழுந்து நிற்பது கட்டாயம் என்றாலும் திரையரங்குகளில் செய்திப் படம் அல்லது ஆவணப் படத்தின் ஒரு பகுதியாக தேசியப் பாடல் இசைக்கப்படும் போது, பார்வையாளர்கள் எழுந்து நிற்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. ஏனெனில் இதனால் படத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன் தேசியப் பாடலின் கண்ணியத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக குழப்பத்தை உருவாக்கும். இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

புதிய விதிகளின்படி 1937-ல் நீக்கப்பட்ட வந்தே மாதரம் பாடலின் வரிகள் சேர்க்கப்பட்டுள்ளன. தாய் நாட்டை லட்சுமி, சரஸ்வதி, துர்கையுடன் ஒப்பிடும் வரிகளும் இனி இசைக்கப்படும். தேசிய கீதத்தை பாடும் போது கடைபிடிக்க வேண்டிய விதிகள் சட்டப்பூர்வமாக வகுக்கப்பட்டுள்ளன. அதுபோல் தற்போது வந்தே மாதரம் பாடலுக்கும் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. தேசியப் பாடலான வந்தே மாதரம் பாடலை அவமரியாதை செய்தால் 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கும் வகையில் விதிகளில் திருத்தம் கொண்டு வந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

# திண்டுக்கல்: ஜல்லிக்கட்டில் காளை முட்டி மாடுபிடி வீரர் பலி

**சென்னை,பிப்.13:**

திண்டுக்கல் அருகே புகையிலைப்பட்டியில் உள்ள புனித சந்தியாகப்பர், செபஸ்தியார் ஆலய திருவிழாவை முன்னிட்டு நேற்று ஜல்லிக்கட்டு போட்டி விறுவிறுப்பாக நடந்தது. இதற்காக திண்டுக்கல், தேனி. மதுரை, விருதுநகர், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த 900 காளைகள் முன்பதிவு செய்யப்பட்டன. இதில் 832 காளைகள் பங்கேற்றன. மருத்துவக்குழுவினர் பரிசோதனைக்குப்பின் 326 மாடுபிடி வீரர்கள் களமாட அனுமதிக்கப்பட்டனர்.

வாடிவாசலில் இருந்து சீறிப்பாய்ந்து வந்த காளைகளை களத்தில் நின்றிருந்த மாடுபிடி வீரர்கள் போட்டிப்போட்டு அடக்க முயன்றனர். ஆனால் பல காளைகள் வீரர்களிடம் சிக்காமல் போக்கு காட்டி சென்றன. சில காளைகள் அடங்க மறுத்து, பிடிக்க வந்த மாடுபிடி வீரர்களை முட்டி பந்தாடின. சீறிப்பாய்ந்த காளைகளுடன் மாடுபிடி வீரர்கள் மல்லுக்கட்டிய காட்சியை பார்வையாளர்கள் பார்த்து ரசித்தனர்.

இதற்கிடையே காளைகள் முட்டியதில் மாடுபிடி வீரர்கள், காளைகளின் உரிமையாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் என 35 பேர் காயமடைந்த னர். அவர்களில் மதுரை மாவட்டம் அலங்காநல்லூரை சேர்ந்த மாடுபிடி வீரர் பாலகுரு (வயது 24), திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகே உள்ள தென்னம்பட்டியை சேர்ந்த முருகன்(50), பில்லமநாயக்கன்பட்டி தமிழரசன்(20) உள்பட 10 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி பாலகுரு பரிதாபமாக இறந்தார். மற்றவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முன்னதாக மாடுபிடி வீரர்களுக்கான மருத்துவ பரிசோதனையின்போது குழப்பம் ஏற்பட்டது. இதனால் வீரர்கள் அங்கு வாக்குவாதம் செய்தனர். இதையடுத்து அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் லேசான தடியடி நடத்தி, வீரர்களை ஒழுங்குப்படுத்தினர். இதனால் அப்பதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## தமிழகம், புதுவை சட்டப் பேரவைத் தேர்தல் தேர்தல் ஆணைய அதிகாரிகள் குழு சென்னை வருகை

**சென்னை,பிப்.13:**

தமிழ்நாடு மற்றும் புதுவை சட்டப்பேரவைத் தோதல் ஆயத்தப் பணிகளை ஆய்வு செய்வதற்காக, தோதல் ஆணையத்தின் துணைத் தோதல் ஆணையாகள் தலைமையில், 7 போ் கொண்ட குழுவினா் புதன்கிழமை சென்னை வந்தனா்.

தமிழகம் மற்றும் புதுவை மாநிலங்களில் பேரவைத் தோதல் விரைவில் நடைபெறவுள்ளது. இதற்கான முன்னேற்பாடு பணிகளைத் தோதல் ஆணையம் தீவிரப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், தோதல் ஆணையத்தின் துணைத் தோதல் ஆணையாகள் பானு பிரகாஷ், மானேஷ் காா்க், பவன்குமாா சா்மா, சஞ்சய் குமாா், ஆசிஷ் கோயல் உள்ளிட்ட 7 போ் கொண்ட குழுவினா் தில்லியிலிருந்து சென்னைக்கு புதன்கிழமை வந்தனா்.

# நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம்!


**புதுடில்லி,பிப்.13:**

மத்திய அரசை கண்டித்து நாடு முழுவதும் பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் காலைமுதல் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்று வருகின்றன.

மத்திய அரசின் தொழிலாளா் விரோத, விவசாயிகள் விரோத, தேசியவிரோத, பெருநிறுவன ஆதரவு கொள்கைகள் மீதான எதிா்ப்பை வெளிப்படுத்தும் வகையில் ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்திருந்தது.

ஐஎன்டியூசி, ஏஐடியூசி, ஹெச்எம்எஸ், சிஐடியு, ஏஐயுடியுசி, யுடியுசி உள்ளிட்ட தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் நிலையில், மின்விநியோகம், காப்பீடு, போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, எரிவாயு, குடிநீா் விநியோகம் உள்பட பல்வேறு துறைகளைச் சோ்ந்த சுமாா் 30 கோடி தொழிலாளா்கள் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தன.

இதன்காரணமாக நாடு



முழுவதும் பல்வேறு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கேரளம், மேற்கு வங்கம், ஒடிஸா உள்ளிட்ட மாநிலங்களில் காலைமுதல் தொழிற்சங்கங்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். கேரளத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்து சங்கமும் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றுள்ளதால், பொதுப் போக்குவரத்து சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை ஆளும் திமுக கூட்டணியில் அங்கம்வகிக்கும் ஏஐடியூசி, சிஐடியு உள்ளிட்ட தொழிற்சங்கங்கள், விவசாய சங்கங்கள் போராட்டத்தில் பங்கேற்றுள்ளன.

இருப்பினும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் காலைமுதல் அரசுப் பேருந்துகள் பெரிய அளவிலான பாதிப்பின்றி சீராக இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும், காலை 10 மணிக்கு மேல் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வெளியே தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட வாய்ப்புள்ளதால், காவல்துறையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

4 தொழிலாளா சட்டங்களை ரத்து செய்ய வேண்டும்; வரைவு விதை மசோதா, மின்சார சட்டத் திருத்த மசோதா, அணுமின் உற்பத்தியில் தனியாரை அனுமதிக்கும் மசோதாவை திரும்பப் பெற வேண்டும் என்பது இந்த தொழிற்சங்கங்களின் முக்கிய கோரிக்கைகளாகும்.

## தொழிற்சங்கங்கள் பொது வேலைநிறுத்தம்; பேருந்து சேவைகளில் பாதிப்பு இல்லை

மத்திய அரசின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நாடு முழுவதும் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற உள்ளது. மின்விநியோகம், காப்பீடு, போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, எரிவாயு, குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பல துறைகளில் பணிபுரியும் சுமார் 30 கோடி தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்த நிலையில், தமிழக அரசின் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் விடுப்பு எடுக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அனைத்து போக்குவரத்துக் கழக ஊழியர்களும் கட்டாயம் பணிக்கு வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனை மீறும் பட்சத்தில் சம்பளம் பிடித்தம் செய்யப்படும் எனவும் போக்குவரத்து துறை தரப்பில் ஊழியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது.

எனவே, தமிழகத்தில் பொது வேலைநிறுத்தம் காரணமாக போக்குவரத்து சேவைகளில் எந்த பாதிப்பும் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்னையில் பேருந்து சேவைகள் இன்று காலை முதல் வழக்கம்போல் இயங்கி வருகின்றன. அதே போல் ஆட்டோ, கால் டாக்சி சேவைகளிலும் பெரிய அளவில் பாதிப்பு இல்லை என்பது குறிப்பி டத்தக்கது.

## தாமனூர் ஜடாமுனீஸ்வர ஆலய மஹா கும் பாபிஷேக விழா



விழுப்புரம், பிப்.13:
விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த தாமனூர் ஊராட்சி ஊர் எல்லையில் இயற்கை எழில் மிகு வயல்வெளிகாட்டின் நடுவில் எழுந்தருளிய அருள்மிகு ஜடாமுனீஸ்வர ஆலய மஹா கும்பாபிஷேக விழா வெகுவிமர்ரையாக நடைபெற்றது.

புதன்கிழமை முதல் யாகசாலை அமைத்து கணபதி பூஜையுடன் தொடங்கி அதனைத் தொடர்ந்து வேத மந்திரங்கள் மற்றும் கோபூஜை உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைப்பெற்று வந்தன.

வியாழக்கிழமை காலையில் புனிதநீர் ஊற்றப்பட்டு தீப ஆராதனைகள் நடைபெற்றன கும்பாபிஷேக விழாவினைக்கான உள்ளூர் வெளியூர் மற்றும் பெங்களூர், சென்னை, போன்ற பல்வேறு இடங்களில் இருந்து பொதுமக்கள் வந்து இருந்தனர்.

**அகரம் ராமதாஸ்**
**செய்தியாளர்**

## திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் 87 வது பொது பேரவை கூட்டம்



திருவாரூர், பிப்.13:
திருவாரூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் 87 வது பொது பேரவை கூட்டம் 11.02.2026 SPR ரெசிடான்சி வடக்கு வீதியில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி க.சித்ரா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர்,சரக துணைப் பதிவாளர் திருவாரூர்,துணை பதிவாளர் (பொவிதி) திட்டம் திருவாரூர், நுகர்வோர் அமைப்பினர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாட்சியர்கள் மற்றும் சங்க செயலாளர்கள் மற்றும் அனைத்து கூட்டுறவுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

## வளரிளம் பருவ பெண் குழந்தைகளுக்கு சுகாதார விழிப்புணர்வு பயிற்சி மற்றும் கண்காட்சி விழா



வளரிளம் பருவ பெண் குழந்தைகளுக்கு சுகாதார விழிப்புணர்வு பயிற்சி மற்றும் கண்காட்சி விழா நடந்தது.

சோனாலிகா ஆரோக்கியம் திட்டத்தின் மூலம் 35 வளரிளம் பருவ பெண் குழந்தைகளுக்கு சுகாதார விழிப்புணர்வு பயிற்சி, குழந்தைகள் இதுவரை கற்றுக்கொண்டதை வரைபடம் மூலம் வரைந்து கண்காட்சியாக வைக்கப்பட்டது. மற்றும் சுகாதார பெட்டகம் மற்றும் பரிசுகள் வழங்கபட்டது.

தலைமை ஆசிரியர் தென்னவன் தலைமையில் ஏகம் அறக்கட்டளையின் பயிற்றுனர் சரஸ்வதி மற்றும் அன்பரசன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு விழிப்புணர்வு பயிற்சி வளரிளம் பருவ பெண் குழந்தைகளுக்குவழங்கினார்கள்.

இந்த திட்டமானது ஏகம் அறக்கட்டளை மூலம் எல்.கே.பி நகர் பள்ளியில் நடைபெற்றது.

## தே.மு.தி.க.வில் விருப்பமனு அளிக்க 3 நாட்கள் அவகாசம் நீட்டிப்பு

**பிரேமலதா அறிவிப்பு**



சென்னை, செப்.13:
தே.மு.தி.க. பொதுச்செய லாளர் பிரேமலதா வெளி யிட்டுள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது:-

தமிழ்நாடு முழுவதும் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளிலும், புதுச்சேரியில் 30 சட்டமன்ற தொகுதியிலும் தே.மு.தி.க. சார்பில் போட்டியிடுவதற்கு விருப்ப மனுக்களை பெற்றுவருகின்றனர்.

தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், தொண்டர்கள் அனைவரின் விருப்பத்திற்கு இணங்க 3 நாட்கள் நீட்டிப்பு செய்து விருப்பமனுக்களை இன்று (13-ந்தேதி) முதல் 15-ந்தேதி மாலை 5 மணி வரை சென்னை கோயம்பேட்டில் உள்ள தலைமை கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விருப்ப மனுக்களை வருகிற 15-ந்தேதிக்குள் தலைமை கழகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்

# திசையன்விளை மனோ கல்லூரியில் “உண்மைச் சரிபார்ப்பு விழிப்புணர்வு பயிற்சி”





திசையன்விளை, பிப்.13:
திசையன்விளை மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் (NSS) சார்பில் “உண்மைச் சரிபார்ப்பு விழிப்புணர்வு பயிற்சி” நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் லில்லி அவர்களின் ஆலோசனைப்படி இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு தகவல் சரி பார்ப்பகத்தின் (Tamil Nadu Fact Check Unit) வழிமுறைகளை பின்பற்றி மாணவர்களுக்கு விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. தகவல் அறிதிறன் (Information Literacy), தவறான தகவல்களின் வகைகள் திட்டமிட்ட பிறழ்தகவல் (Disinformation), உள்நோக்கமற்ற பிறழ்தகவல் (Misinformation), திரிக்கப்பட்ட தகவல் (Misleading Information) ஆகியவை தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன. மேலும் போலிச் செய்திகளை (Fake News) எவ்வாறு கண்டறிவது, அதன் சமூக விளைவுகள், வெறுப்பு பேச்சின் (Hate Speech) தாக்கங்கள், அறிவியல் மனப்பாங்கின் அவசியம் மற்றும் இணைய பாதுகாப்பு (Cyber Safety) குறித்த விழிப்புணர்வு அம்சங்களும் விளக்கமாக கூறப்பட்டன.

நிகழ்ச்சியில் வணிகவியல்துறை தலைவர் முனைவர் ஒயிட்டன் சகாயராஜ், பேராசிரியர்கள் முனைவர் ஜெயஸ்ரீ, யமுனா, முனைவர் இந்துமதி, முனைவர் ஆனந்தவேணி, முனைவர் முருகன், சுப்ரமணியன், பட்டு, சூர்யா மற்றும் மேனிஷா ஆகியோர் கலந்துகொண்டு தகவல் சரிபார்ப்பதின் அவசியத்தையும், சமூக ஊடகங்களில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினர்.

நிகழ்ச்சியின் முக்கிய சாராம்சத்தை நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர் பலவேசகிருஷ்ணன் அவர்கள் எடுத்துரைத்து, “நம்புவதற்கு முன் சிந்திக்கவும்; பகிர்வதற்கு முன் சரிபார்க்கவும்” என்ற கருத்தை மாணவர்களுக்கு வலியுறுத்தினார். மாணவர்கள் சமூகத்தில் பொறுப்பான டிஜிட்டல் குடிமக்களாக உருவாக வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் அமைந்த இந்த நிகழ்ச்சி, தகவல் சரிபார்ப்பின் முக்கியத்துவத்தை உணர்த்திய தோடு, மாணவர் மத்தியில் மிகுந்த உற்சாகத்தையும் விழிப்புணர்வையும்ஏற்படுத்தியது.

## தொழிற்சங்கங்கள் நாடு தழுவிய போராட்டம் கோவையில் இருந்து கேரளா செல்லும் பஸ்கள் நிறுத்தம்



கோவை, பிப்.13:
மத்திய அரசை கண்டித்து நாடு முழுவதும் பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சாரபில் இன்று காலைமுதல் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டத்திற்கு கேரள அரசு போக்குவரத்து ஊழியர்கள் முழு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால் அங்கு பொதுபோக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கோவை காந்திபுரத்தில் இருந்து கொச்சி, எர்ணாகுளம், திருச்சூர், திருவனந்தபுரம், கோழிக்கோடு உள்ளிட்ட பகுதிகளுக்கு 12 பஸ்கள் இயக்கப்படுகிறது. இதேபோன்று, உக்கடத்தில் இருந்து குருவாயூர், பாலக்காடு, திருச்சூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு 20-க்கும் மேற்பட்ட பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

கேரளாவில் இருந்து கோவைக்கு வேலைக்கு வருவோர், கோவையில் இருந்து கேரளாவுக்கு வேலைக்கு செல்வோர் தினமும் இந்த பஸ்களை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தொழிற் சங்கங்களின் போராட்டத்துக்கு கேரள போக்குவரத்து ஊழியர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதால் அங்கு பஸ்கள் ஓடவில்லை. இதன் காரணமாக கேரளாவில் இருந்து கோவைக்கு இயக்கப்படும் அனைத்து பஸ்களும் இன்று ஓடவில்லை. உக்கடம் பஸ் நிலையத்தில் கேரள பஸ்கள் நிறுத்தி வைக்க கூடிய இடம் இன்று பஸ்கள் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது.

கேரள போக்குவரத்து கழகத்தின் சார்பில் கோவையில் இருந்து கேரளாவுக்கு இயக்கப்படும் பஸ்கள் ஓடவில்லை. இதனால் கோவையில் இருந்து கேரளாவுக்கு செல்லும் பயணிகள் கடும் சிரமம் அடைந்தனர்.

சிலர் ரெயில்கள் மூலமாக கேரளாவுக்கு சென்றனர். இதனால் கேரளாவில் இருந்து கோவை வந்த ரெயில்களில் முன்பதிவு இல்லா பெட்டிகளில் பயணிகள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

தமிழக-கேரள எல்லையான வாளையாறு சோதனை சாவடி வரை கோவையில் இருந்து டவுன் பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது.

## ஈஷாவில் பிப்ரவரி 15ஆம் தேதி மகா சிவராத்திரி விழா பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்



கோவை, பிப்.13:
கோவை தொண்டாமுத்தூர் பகுதியில் உள்ள ஈஷா யோகா மையத்தில் மகா சிவராத்திரி விழா பிப்ரவரி 15ஆம் தேதி மாலை கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இவ்விழாவில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜநாத் சிங் சிறப்பு விருந்தினராக பங்கெடுக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான பத்திரிக்கை யாளர்கள் சந்திப்பு கோவை பிரஸ் கிளப் அரங்கில் இன்று நடைபெற்றது. இதில் தென் கைலாய பக்தி பேரவையின் தன்னார்வலர் ரவீந்திரன் மற்றும் தன்னார்வலர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் பேசியதாவது, "ஈஷாவில் 32வது மகா சிவராத்திரி விழா 15ஆம் தேதி பிரமாண்டமாக கொண்டாடப்பட உள்ளது. இதில் சிறப்பு விருந்தினராக பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும் லட்சக் கணக்கான மக்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.

15 ஆம் தேதி மாலை 6 மணிக்கு தொடங்கி மறுநாள் காலை 6 மணி வரை மகா சிவராத்திரி விழா நடைபெற உள்ளது. இதில் சக்தி வாய்ந்த தியானங்கள், மந்திர உச்சாடனைகள், யோகேஸ்வரலிங்க மகா அபிஷேகம் மற்றும் சிறந்த கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

மேலும் இந்தாண்டு முதன் முறையாக சத்குரு ஆதியோகி முன்பு பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் யோகேஸ்வர லிங்கத்திற்கு மகா அபிஷேகம் எனும் ஆன்மிக செயல்களை அர்ப்பணிக்க உள்ளார்" என தெரிவித்தனர்.

மேலும், மக்களின் வசதிக்காக தேவையான பார்க்கிங் வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கழிவறைகள், மருத்துவ வசதி உள்ளிட்டவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த விழாவிற்கு பல்வேறு நாடுகளில் இருந்து மக்கள் வருகை தர உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

ஈஷாவில் நடைபெறும் மகா சிவராத்திரி விழாவை இந்தியா முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட உள்ளதாகவும், தமிழ்நாட்டில் 60 இடங்களிலும், கேரளாவில் 29 கோவில்களிலும் நேரலை செய்யப்பட உள்ளதாக தெரிவித்தனர்.



சென்னை, பிப்.13:
இன்று 12-02-2026, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.K.செல்வப்பெருந்தகை அவர்கள் தலைமையில், ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து தொழிற்சங்கங்கள் சார்பில் சென்னையில்மாபெரும்கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் திரு. வி.கே. அறிவழகன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அமைப்பு செயலாளர் திரு. ராம் மோகன், ஆராய்ச்சி துறை தலைவர் திரு. மாணிக்கவாசம், வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் மதாரம்மாகனி பாரூக் உட்பட சென்னை மாவட்ட தலைவர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட, வட்டார, சர்க்கிள், நகர, பேரூர், வார்டு காங்கிரஸ் நிர்வாகிகள், முன்னணி அமைப்புகள், துறைகள் மற்றும் பிரிவுகளின் தலைவர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருந்திரளான காங்கிரஸ் கட்சியினர் பங்கேற்றனர்.







## மக்கள் பணியில் பங்கு கேட்டால் அது எப்படி சதியாகும்?

**மாணிக்கம் தாகூர்**



சென்னை, பிப்.13:
“மக்கள் முடிவு செய்வார்கள் .கூட்டணி ஆட்சியா? அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை

தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சிக்கு இடமில்லை

தமிழ்நாட்டில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் நீடித்தாலும், வரும் தேர்தலில் வெற்றிப் பெற்றால் ஆட்சியில் பங்கு வேண்டும் என காங்கிரஸின் சில தலைவர்கள் கடந்தசில நாட்களாகவே வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் திமுக தரப்பில் தொடர்ந்து மறுப்பு தெரிவிக்கப்பட்டு வந்தது. அவ்வப்போது திமுக அமைச்சர்கள் இதுதொடர்பாக கருத்து தெரிவிக்க, அதற்கு பதிலளித்து இந்த மோதலை நீட்டித்து வந்தார் காங்கிரஸ் எம்.பி.மாணிக்கம் தாகூர்.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சிக்குஇடமில்லை எனத் தெரிவித்து காங்கிரஸ் கோரிக்கையை நேரடியாக நிராகரித்துள்ளார். மேலும், கூட்டணியைப் பிரிக்கச் சிலர் சதி செய்வதாகவும் தெரிவித்தார்.

இதற்கு நேற்றே எதிர்வினையாற்றிய காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர், "மக்கள் முடிவு செய்வார்கள் .கூட்டணி ஆட்சியா? அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை . 2006-ல் மக்கள் தீர்பை செயல்படுத்தாதது நம் தவறு" என தனது எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருந்தார். இது விவாதப் பொருளானது. இந்நிலையில் இன்றும் இதுதொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில் ஒரு பதிவிட்டுள்ளார். அதில், "தோழமையில் மக்கள் பணியில் பங்கு கேட்டால் அது எப்படி சதியாகும்?" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மாணிக்கம் தாகூர் உள்ளிட்ட சில காங்கிரஸ் தலைவர்கள் திமுகவின் இந்த நிலைப்பாட்டில் முரண்பட்டாலும், மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை அமைதியாகவே இருக்கிறார். அனைத்தையும் தலைமை பார்த்துக்கொள்ளும் என அவ்வப்போது வெடிக்க வரும் பிரச்சனையை அமர்த்திவருகிறார்.

## அரசியலில் இருந்து என்னை ஒழித்துக்கட்ட சதி அன்புமணி மீது ராமதாஸ் தாக்கு



திண்டிவனம், பிப்.13:
திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

அரசியலில் இருந்து என்னை ஒழித்துக்கட்ட எதை எதையோ பேசுகிறார்கள். ஒரு கூட்டம் பொய் பேசுவதையே அரசியலாக கொண்டு செயல்படுகிறது. அந்த கூட்டத்தை நாங்கள் கட்சியில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கி விட்டோம். அவர்களிடம் ஒரு கூட்டம் சேர்ந்து செயல்படுகிறது.

என்னை பற்றி அவதூறாக மனம் புண்படும்படியும், ஏளனமாகவும், பொய்யும், புரட்டுமாக பேசுகின்றனர். எங்களை வசைப்பாடுகிறார்கள். என்னை மட்டுமின்றி அரசியல் அனுபவம் கொண்ட பா.ம.க. கவுரவ தலைவர் ஜி.கே. மணியையும் அவர்கள் வசைப்பாடுகிறார்கள்.

டெல்லி உயர்நீதிமன்றத்தில் நமக்கு சாதகமாக 2 முறை தீர்ப்பு வந்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் அதிகாரிகள் சிலரை அக்கும்பல் தன் வசப்படுத்தியதால் அவர்களுக்காக தேர்தல் ஆணையம் டெல்லி உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது.

தேர்தல் ஆணையத்தில் அடிமட்ட அதிகாரிகள் ஒருதலைபட்சமாக நடந்து கொள்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யவேண்டிய வழக்கை தேர்தல் ஆணையம் செய்துள்ளது. தேர்தல் ஆணையம் சரியான திசையில் செல்லவில்லை.கூட்டணி குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம்.


இவ்வாறு அவர் கூறினார்.


Breaking News Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருட்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.



Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

## கவிதை அரங்கம்!





தன் திறமையின் மீது
ஆழமான நம்பிக்கை
கொண்ட
ஒருவனின் பார்வை எதிர்
உள்ளவர்களுக்குத்
திமிராகத்
தோண்றுவதில் திவறில்லை

தோல்விகள் என்பது
உன்னை
தூங்க வைக்க பாடும்
தாலாட்டு இல்லை
உன்னை நிமிர்ந்து நிற்க
வைக்கும் தேசிய கீதம்

ஒவ்வொரு நாளும் எனைக்
குத்தி கூறுபோடும் நிஜம்
அது நான் இன்னும்
சாதனை சத்தம் கேட்காத
சராசரி பெண்

வெற்றிக்கான திறவுகோல்
தடைகளில் அல்ல
இலக்குகளில் கவனம்
செலுத்துவதாகும்

## வாழ்க்கை தத்துவம்...



சிரிப்பது ஒருவரின்
முகத்தை அழகாக்கும்
மனதை விடுதலை செய்யும்

மனிதன் தவறுகள் செய்வான்
அவற்றை ஏற்றுக் கொள்வதே
அவன் பெரிய வெற்றி

நல்ல நினைவுகள் தான்
வாழ்வின் நீண்ட செல்வம்

வாழ்க்கை என்பது
சரியாக நடக்கும்
நாட்கள் அல்ல
தவறுகளைக் கடந்து
எழும் நாட்கள் தான்

ஒவ்வொரு நாளும்
ஒரு புதிய பக்கம்
அதில் எழுதுவது
நம் கைகளில் தான்

## ரோஜா சொல்லுமா?

காலேஜில் அன்று ஃபேர்வெல் டே. பார்ட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. எல்லா மாணவர்களும் கோர்ஸ் கம்ப்ளீட் பண்ணிட்டோம் என்ற சந்தோஷம் இருக்க, மறுபுறம் நண்பர்கள் அனைவரும் பிரியும் நேரம். மனம் சற்று கனத்தது. வாழ்க்கையில் அடுத்த கட்ட நகர்வுக்கு அவர்கள் தயாராக வேண்டும். அந்த வருத்தமும் மனதில் ஓரத்தில் உள்ளது. இருப்பினும் ,கல்லூரி கால இனிமையான நாட்களை அசைப்போட்டு ,ஆடி, பாடி சந்தோஷத்துடன் இருந்தார்கள். ஒவ்வொருவரும் "தான் முதல் நாளில் கல்லூரியில் நுழைந்த அனுபவத்தினை" பகிர்ந்து கொண்டிருந்தார்கள். முரளியின், மீராவும் தனித்தனியே தன்னுடைய நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். இருவருமே கடந்த நான்கு ஆண்டுகளில் ஒரே வகுப்பில் படித்தாலும் "எலியும், பூனையும் போல்" இல்லை ...இல்லை ... "டாம் அண்ட் ஜெர்ரி" போல், இப்படி சொன்னால் தான் நன்றாக இருக்கும். எதற்கெடுத்தாலும் சண்டை போட்டுக் கொண்டே இருப்பார்கள். இருவரும் நன்றாக படிக்கக் கூடியவர்கள். இருவருக்கும் கேம்பஸ் இன்டர்வியூவில் வேலை கிடைத்து விட்டது .விழா முடிந்தவுடன் இன்னும் சற்று நேரத்தில் அனைவரும் வீட்டிற்கு செல்ல வேண்டும். வகுப்பறையில் அவர்கள் அடித்த லூட்டியை மறக்க முடியவில்லை. அதனால் வகுப்பை விட்டு பிரியவும் மனசில்லாமல், ஒருவருக்கொருவர் தங்களுடைய மனதில் இருக்கும் ஏக்கங்களை பகிர்ந்து கொண்டனர். அப்பொழுது முரளியின் நண்பன் பிரகாஷ் வந்தான். டேய் முரளி இப்பவாவது உன் மனதில் உள்ளதை மீராவிடம் சொல்லிவிடு. இல்லை என்றால் உனக்கு வாய்ப்பே கிடைக்காது. அவள் வெளியூருக்கு வேலைக்குச் சென்று விடுவாள் .நீயும் வேறு ஊருக்கு வேலைக்கு சென்று விடுவாய். இதுதான் கடைசி வாய்ப்பு .போடா... போ, போய் சொல்லு என்று பிரகாஷ் கூறினான். தயக்கமா இருக்குடா என்றான் முரளி .அவ வேற கோவக்காரி எப்படி ரியாக்ட் பண்ணுவாளோனு தெரியல டா? என்றான். அப்படியா ,சரி ..சரி வா கிளம்பலாம். எல்லோரும் கிளம்பிட்டாங்க. நாமும் போகலாம் என்றான். பிரகாஷ், நீ போடா நான் இன்னும் கொஞ்ச நேரம் கிளாஸில் உட்கார்ந்துட்டு வரேன். இனி வகுப்புக்குள்ள வர முடியாது இல்ல என்றான் .உடனே பிரகாஷ் வெளியே சென்று விட்டான். முரளி போர்டையே உற்று பார்த்துக் கொண்டிருந்தான். அதில் விழாவிற்காக மீரா அழகிய ரோஜாப்பூ ஒன்றை படமாக வரைந்திருந்தாள் . அந்த ரோஜாப்பூ முரளியை பார்த்து சிரித்தது .உடனே முரளி சாக்பீஸ் எடுத்து அந்த ரோஜாப்பூவின் காம்பின் கீழே தன்னுடைய பெயரின் முதல் எழுத்தான "M" என்று எழுதிவிட்டு வந்துவிட்டான். அதை ஜன்னல் வழியாக மீரா பார்த்து விட்டாள். உடனே கதவின் அருகே மறைந்து கொண்டு நின்றிருந்தாள். மீராவின் முதல் எழுத்தும்" M "தானே! அவன் வெளியே வந்த போது ,கதவின் அருகில் நின்றவளை பார்த்து அதிர்ச்சி அடைந்தான். மனது பட.... பட ..வென்று அடித்துக் கொண்டது. அவன் விறு ..விறு ..என அவளைத் தாண்டி சென்றான். நண்பனுடன் பேசுவதற்காக பாக்கெட்டில் இருந்து ஃபோனை எடுக்க கைவிட்ட பொழுது பாக்கெட்டில் போன் இல்லை. அடடா !! வகுப்பிலேயே ஃபோனை வைத்துவிட்டு வந்து விட்டேனே ,என்று மறுபடியும் ஃபோனை எடுப்பதற்காக முரளி வகுப்பிற்கு வந்தான். அதே ஜன்னல் வழியாக அவன் பார்த்தான். உள்ளே மீரா போர்டில் உள்ள படத்தை தன்னுடைய ஃபோனில் போட்டோ எடுத்துக் கொண்டிருந்தாள். அவன் அங்கேயே நின்று விட்டான். மீரா வெளியே வந்த போது முரளி நிற்பதை பார்த்து அவளுக்கு ஷாக் ஆயிடுச்சு. சமாளித்துக் கொண்டு சிறு புன்னகையுடன் அவள் சென்றாள் . வகுப்பறையின் உள்ளே சென்ற முரளி தன் ஃபோனை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். நண்பன் பிரகாஷ் ஃ போன் செய்தான் எங்கடா இருக்க? சீக்கிரமா வா. எல்லாரும் உனக்காகத்தான்" கேட்" வாசல்ல காத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு பை..பை.. சொல்லிவிட்டு கிளம்பிடுவோம். பேசி முடித்தவுடன் பார்த்தான். ஏதோ மெசேஜ் வந்திருக்கிறது. அதை ஓபன் செய்து பார்த்தான் . போர்டில் உள்ள போட்டோ இவனோட போனிலும் இருந்தது முரளிக்கு ரொம்ப சந்தோஷம். ஏய்!! என்று கத்தினான். உடனே அவன் திருப்பி அந்த ரோஜா படத்தை மீராவுக்கு அனுப்பினான். படத்தில் உள்ள முதல் எழுத்தான" M "இரண்டு பேரையும் இணைத்தது சொல்லாமலே புரிந்தது .ரோஜாப்பூ இனிமேல் சொல்லும்.



**எம்.எல்.பிரபா**
ஆதம்பாக்கம்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*“டி.வி.பார்க்கறது பெண்களுக்கு சகஜம்தானே...*

*இதையேன் பெரிசா சொல்றீங்க...?”*

*“அட! நீங்க ஒன்னு கரண்ட் இல்லைன்னாலும் டி.வியைப் பார்த்துக்கிட்டு உக்கார்ந்திருக்காங்க.!”*



## தினம் ஒரு சமையல்



### கருணை கிழங்கு வறுவல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| கருணை கிழங்கு | -1/2 |
| மிளகாய் தூள் | -1 ஸ்பூன் |
| மல்லி தூள் | -1ஸ்பூன் |
| கார்ன் மாவு | -4 ஸ்பூன் |
| மஞ்சள் தூள் | -1/2 ஸ்பூன் |
| உப்பு | -தேவையானஅளவு |
| பொரிக்க ஆயில் | -தேவையான அளவு |
| இஞ்சி பூண்டு விழுது | -1 ஸ்பூன் |

செய்முறை:



கருணை கிழங்கு தோல் சீவி குச்சி குச்சி ஆக கட் செய்து கொள்ள வேண்டும்.....


அதனுடன் கான்பிளவர் மாவு இஞ்சி பூண்டு பேஸ்ட் மஞ்சள் தூள் மிளகாய் தூள் மல்லித்தூள் உப்பு அனைத்தையும் நன்றாக சேர்த்துக் கொள்ள வேண்டும்......

இரண்டு அல்லது மூன்று ஸ்பூன் தண்ணீர் விட்டு பிசைந்து கொள்ளவேண்டும் அதிகமாக தண்ணீர் சேர்க்கக் கூடாது

அரை மணி நேரம் அப்படியே ஊறவிட வேண்டும்

அதன் பிறகு எண்ணெயில் பொரித்தெடுக்கவும் கருவேப்பிலை எண்ணெயில் வறுத்து சேர்த்துக் கொள்ளவும் இறுதியாக எலுமிச்சை பிழிந்து விட்டு சாப்பிட்டால் நன்றாக இருக்கும்.....

## மஞ்சள் அலரி பயன்கள்



மஞ்சள் அலரி (பொன்னரளி) அதிக நச்சுத்தன்மை வாய்ந்த ஒரு மருத்துவத் தாவரமாகும். இது தோல் நோய்கள், கழலைகள், மற்றும் நாள்பட்ட புண்களைக் குணப்படுத்த சித்த மருத்துவத்தில், குறிப்பாக மேல்பூச்சாகப் (EXTERNAL APPLICATION) பயன்படுத்தப்படுகிறது. வேர்ப்பட்டை மற்றும் இலைகள் வாந்தியுண்டாக்கி மற்றும் புழுக்கொல்லியாகவும் செயல்படுகின்றன. எனினும், இது உயிருக்கு ஆபத்தான நச்சுத்தன்மை கொண்டது.

மஞ்சள் அலரியின் முக்கிய பயன்கள் மற்றும் தகவல்கள்:

மருத்துவப் பயன்பாடுகள் (வெளிப்புறப் பயன்பாடு):

தோல் நோய்கள், படை, சொறி சிரங்கு மற்றும் கிரந்தி நோய்களுக்கு மருந்தாகப் பூசப்படுகிறது.

கழலைகள் (TUMORS) மற்றும் வீக்கங்களைக் கரைக்கப் பயன்படுகிறது.

நாள்பட்ட புண்கள் மற்றும் பால்வினை நோய்ப் புண்களை ஆற்றப் பயன்படுகிறது.

தலை எரிச்சல், பித்த நோய்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

பயன்படுத்தும் முறை: நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களின் ஆலோசனையுடன், பெரும்பாலும் வெளிப்பூச்சாகவே பயன்படுத்த வேண்டும்.

நச்சுத்தன்மை எச்சரிக்கை: மஞ்சள் அலரி மிக அதிக நச்சுத்தன்மை கொண்டது. இதை உட்கொள்வது மரணத்தை ஏற்படுத்தும். குழந்தைகள் அறியாமல் சாப்பிட்டால் ஆபத்து.

ஆன்மீக/பூஜை பயன்பாடு: கோயில்களில் வழிபாட்டிற்கும், திருமணத் தடைகளை நீக்க மஞ்சள் அலரி பூக்களும் பயன்படுத்தப்படுகின்றன.

குறிப்பு: மஞ்சள் அலரியின் வேர் மற்றும் இலைகளில் நச்சு உள்ளதால், மருத்துவர் ஆலோசனையின்றி பயன்படுத்தக் கூடாது.

காய்ச்சல் பிரச்சனை நீங்கும்

சிலருக்கு அவ்வப்போது காய்ச்சல் வருவதை நீங்கள் கவனித்திருக்கலாம். இந்தப் பிரச்சனையைக் குறைக்க அவர்கள் மஞ்சள் அரளியைப் பயன்படுத்தலாம். அந்த மக்கள் மஞ்சள் நிற அரளி இலைகள் மற்றும் பட்டைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கஷாயத்தை உட்கொள்ள வேண்டும். இதைச் செய்வதன் மூலம், இடைவிடாத காய்ச்சல் என்றென்றும் நீங்கும்.

மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும்

இன்றைய காலகட்டத்தில் மலச்சிக்கல் பிரச்சனையால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மஞ்சள் அரளி இலை இந்தப் பிரச்சனையைப் போக்க உதவியாக இருக்கும். அத்தகைய சூழ்நிலையில், மஞ்சள் அரளி இலைகள் மற்றும் பட்டைகளைக் கஷாயம் செய்து அதை உட்கொள்ளுங்கள். அவ்வாறு செய்வதன் மூலம் மலச்சிக்கல் பிரச்சனை நீங்கும்.

## சூர்யா - ஜோதிகா காதல் கல்யாணத்துக்கு காரணமே இந்த நடிகைதான்.. சிவகுமார் ஓபன் டாக்



மிழ் சினிமாவில் முன்னணி ஹீரோவாக வலம் வருபவர் சூர்யா. இவர் நடிப்பில் அடுத்ததாக கருப்பு திரைப்படம் வெளிவரவுள்ளது. வருகிற ஏப்ரல் மாதம் இப்படம் வெளியாக அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

இதை தொடர்ந்து சூர்யா 46 மற்றும் 47 ஆகிய திரைப்படங்களை கைவசம் வைத்துள்ளார் நடிகர் சூர்யா. இந்த இரண்டு படங்களின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

சூர்யா – ஜோதிகா காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், அவர்கள் காதல் கல்யாணத்திற்கு யார் முக்கிய காரணம் என்பதை, சூர்யாவின் தந்தையும், மூத்த நடிகருமான சிவகுமார் சமீபத்திய பேட்டி ஒன்றில் ஓபனாக பேசியுள்ளார்.

அவர் கூறியதாவது, “சூர்யா – ஜோதிகா காதல் கல்யாணத்துக்கு முக்கிய காரணமே ராதிகாதான். உயிரிலே கலந்தது படப்பிடிப்பில் தனியா இருந்த சூர்யாகிட்ட, ஜோதிகாகிட்ட போய் பேசுன்னு தூண்டிவிட்டது அவங்கதான். நான் என்னோட சினிமா வாழ்க்கையில் 150 கதாநாயகிகளை லவ் பண்ற மாதிரி நடித்திருக்கேன். அப்படி இருக்கும்போது, என் மகனோட காதலுக்கு என்னால் எப்படி வேண்டாம்னு சொல்ல முடியும்” என கூறியுள்ளார்.



Anaganaga Oka Raju என்ற படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகி இருந்தது. மீனாட்சியின் அழகிய சேலை போட்டோஷூட் புகைப்படங்களை பாருங்க.




## சம்பளத்தில் நயன்தாராவை முந்திய சாய் பல்லவி.. D55 படத்திற்கு இத்தனை கோடி வாங்குகிறாரா?



தமிழ் சினிமாவில் நடிகை நயன்தாரா தான் பெரிய சம்பளம் வாங்கும் நடிகையாக இருந்து வருகிறார். சோலோ ஹீரோயினாகவும் அவர் படங்களில் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அவர் மூக்குத்தி அம்மன் 2, யாஷ் உடன் டாக்சிக் போன்ற பல படங்களில் அவர் தற்போது நடித்து வருகிறார். அவர் கடைசியாக தெலுங்கில் Mana Shankara Vara Prasad Garu படத்தில் நடித்து இருந்தார்.

அந்த படத்திற்காக சுமார் 10 கோடி ரூபாயை நயன்தாரா வாங்கியதாக செய்தி வெளியாகி இருந்தது.

இந்நிலையில் தனுஷுடன் D55 படத்தில் சாய் பல்லவி நடிக்க இருக்கிறார். அந்த படத்தில் ஸ்ரீலீலாவும் நடிக்கிறார்.

இந்த படத்திற்காக சாய் பல்லவிக்கு 12 கோடி ரூபாய் சம்பளமாக தரப்படுவதாக தகவல் கசிந்து இருக்கிறது. கடந்த படத்தில் 10 கோடி வாங்கிய நயன்தாராவை சாய் பல்லவி தற்போது முந்தி இருக்கிறார்.

# புயல் ஒன்று புறப்பட்டதே!!!!

காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த மண்டலம், புயல்னு சொல்றாங்க?
அது காற்று சுழற்சியின் வேகத்தை செயற்கைக்கோளில் இருந்தும் நமது ரேடார்கள் மூலமும் கணித்து புயலின் காற்று சுழலும் வேகம் கூடக்கூட அதற்கு பெயர் மாறிக் கொண்டே இருக்கிறது.
மணிக்கு 31.5 கிமீ மேல் சுழற்சி வேகம் இருந்தால் அது காற்றழுத்தத் தாழ்வு பகுதி

அதுவே மணிக்கு 31.5 முதல் 50 கிமீ சென்றால் அது தாழ்வு மண்டலம் (Depression)
மணிக்கு 50 முதல் 62 கிமீ என்றால் அது ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம். ( DEEP depression)
மணிக்கு 62 கிலோமீட்டருக்கு மேல் சுழலும் வேகம் இருப்பின் அது புயலாக கணக்கில் கொள்ளப்படும்.
62-87 வரை புயல்(cyclone)
87-116 வரை
தீவிர புயல் ( Severe cyclone)
116- 222 km/hr வரை அதி தீவிர புயல்( very severe cyclone)
›222 கிமீ மேல் super cyclonic storm ( அதி பயங்கரப் புயல் / சூப்பர் புயல்)
இந்த சுழற்சி வேகம் அதிகரிக்க புயலின் மோட்டார் வேகமாக சுழல்வதற்கு முக்கிய தேவை - கடலின் மேற்பரப்பு நீரின் வெப்பமாகும்.
27டிகிரி செல்சியஸுக்கு மேல் கடல் நீர் வெப்பமாக இருக்கும் போது , தொடர்ந்து சுழற்சி வேகம் அதிகமாகிக் கொண்டே இருக்கும். இவ்வாறு ஒரு காற்றழுத்தத் தாழ்வு பகுதி புயலாக உருமாறுவது சைக்ளோஜெனெசிஸ் என்று அழைக்கப்படுகிறது.

இவ்வாறு தீவிரமடைவது (INTENSIFICATION) என்று அழைக்கப்படுகிறது.
தற்காலத்தில் மீலீனியத்துக்குப் பிறகு தோன்றும் வங்காள விரிகுடா புயல்கள் - முந்தைய புயல்களை விட வேகமாக தீவிரமடைகின்றன என்று



ஆய்வுகள் கூறுகின்றன.
அடுத்து புயல் நகரும் வேகம் இதை TRANSLATIONAL SPEED என்று அழைக்கிறார்கள்.

ஏன் தற்கால வெப்ப மண்டல புயல் சின்னங்கள் வேகமாக தீவிரமடைந்தும் மெதுவாக நகர்கின்றன?
இதற்குக் காரணம் உலகம் தன்னளவில் முந்தைய காலங்களை விட சற்று வெப்பம் கூடியிருக்கிறது.

சுமார் ஒரு டிகிரி முதல் ஒன்றரை டிகிரி வரை கால நிலை மாற்றம் காரணமாக பூமி சூடாகியிருப்பது உண்மை.
இதன் காரணமாக பூமத்திய ரேகைக்கு அருகில் இருக்கும் வெப்ப மண்டலப் பகுதிகளில் இருக்கும் கடல் / விரிகுடா/ பெருங்கடல் ஆகியவற்றின் மேற்புற நீர் எப்போதும் சூடாகவே இருக்கிறது
புயல் சின்னம் உருவாக அழுத்தத்தில் தாழ்வு நிலை ஏற்பட வேண்டும்
அதற்கு கடலின் மேற்புற நீரின் வெப்பம் -27 டிகிரி செல்சியஸுக்கு மேல் இருக்க வேண்டும். இதன் காரணமாகவே புயல் சின்னம் உருவாகிறது.

ஆயினும் தற்காலப் புயல்கள் முன்னெப்போதும் இல்லாத அளவு விரைவாக தீவிரமடைகின்றன (RAPID INTENSIFICATION)
புயல் தீவிரமடைந்தது என்று கூறப்பட்டால்
அதன் சுழற்சி வேகம் தீவிரமடைந்துள்ளது என்று பொருள் கொள்ள வேண்டும்.
புயல் தனது கண் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையைக் கொண்டிருக்கும் எனவே தன்னகத்தே ஈரப்பதத்தை உறிஞ்சி இழுத்துக் கொண்டே இருக்கும். இது சுழற்சியாக மாறி வளிமண்டலத்தின் மேலே சென்று நீராவி குளிர்ந்து மேகங்களாக மாறும் இதனால் தன்னகத்தே ஈரப்பதம் மிகுதியாகக் கொண்ட மழை தரும் மேகக் குவியல்களை தன்னை சுற்றி சுழன்று கொண்டிருக்கச் செய்யும்
இந்த சுழற்சியின் வேகத்தை (ROTATION SPEED) வைத்துத் தான் காற்றழுத்த தாழ்வு நிலை, பகுதி, மண்டலம்
புயல் என்றும் தீவிரப் புயல் என்றும் பெயர் பெறுகிறது.

இது புயலின் காற்று வீசும் வேகத்தைக் குறிக்கும்.
எனவே புயல் தீவிரமடையும் போது காற்றின் பலமான வீச்சினால் ஏற்படும் சேதங்கள் பொருள்கொள்ளப்படும்.
1971 முதல் 1990 வரை ஏற்பட்ட வெப்ப மண்டல புயல் நிலைகளை ஒப்பிடும் போது 2001 முதல் 2020 வரை ஏற்பட்ட புயல்கள் 28.7% வேகமாக தீவிரமடைந்துள்ளன.
நவீன காலப்புயல் நிலைகள் 24 மணிநேரத்திலேயே 50 நாட்ஸ் (› மணிக்கு 90 கிலோமீட்டர்) வேகம் அளவு தீவிரமடைகின்றன.
முந்தைய காலப் புயல்கள் 20 நாட்ஸ் எனும் வேகம் எடுக்க 36 மணிநேரங்கள் எடுத்துக் கொண்ட வேளையில் தற்காலப் புயல்கள் 24 மணிநேரங்களுக்குள்ளேயே அந்த வேகத்தை அடைகின்றன.
இதற்குக் காரணம் வெப்பமான கடலின் மேற்பரப்பு அதிலிருந்து எரிபொருளை எடுத்துக் கொண்டு சுற்றிச் சுழலுவதே காரணம்.
எனினும் இதில் இன்னொரு விசயத்தையும் நாம் கவனிக்க வேண்டும் "புயலின் நகர்வு வேகம்" இதை TRANSLATIONAL SPEED என்று அழைக்கிறார்கள்.

மந்தமான புயல் மெதுவான புயல் மணிக்கு 2 கிமீ மணிக்கு 5கிமீ மணிக்கு 10 கிமீ வேகத்தில் தான் நகர்கிறது என்று கூறும் போது அது புயலின் சுழற்சி வேகத்தைக் குறிக்காது.
மாறாக அந்தப் புயல் பூமியின் மேற்பரப்பில் நகர்ந்து செல்லும் வேகத்தைக் குறிக்கிறது.
ஒரு புயலின் சுழற்சி வேகம் அதிகமாக கடலின் வெப்பமான மேற்பரப்பு நீர் தேவை என்று பார்த்தோம்

அதுவே புயலின் நகர்வு வேகத்திற்கு நமது வளிமண்டலத்தில் காற்று வீசும் போக்கும் அதன் வேகமுமே காரணம். இவ்வாறு ஒரு புயலை நகர்த்தி வழிநடத்துவதற்கு வளிமண்டல காற்று வீசும் வேகம் முக்கியமாகிறது. கூடவே வழிநடத்தும் அதி காற்றழுத்த மேட்டுப் பகுதிகளின் (RIDGES) விளைவும் புயலின் நகர்வில் பங்காற்றுகிறது.
வங்காள விரிகுடா புயல்கள் ஏன் மேற்கு வட மேற்கு நோக்கியே நகர்கின்றன.
அதற்குக் காரணம் நமது பூமியின் சுழற்சி மற்றும் அதனால் உண்டாகும் கோரியாலிஸ் விசை.
1949 முதல் 2016 வரை நடத்தப்பட்ட ஆய்வில் வெப்ப மண்டலப் புயல்களின் நகரும் வேகம் 10% குறைந்திருக்கிறது.
புயல்கள் மெதுவாக நகர்வது என்பது அந்த புயல்களால் ஏற்படும் மழைப்பொழிவின் அளவை நாம் கணிக்கும் அளவுகளில் இருந்து கூட்டும் வாய்ப்பு அதிகமாகிறது.
காரணம் ஒரு புயல் சின்னம் உருவானதும் அது நாம் நினைத்தது போல கரையைக் கடந்து விட்டால்
குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு மழை அதிகமாக தராமல் பல இடங்களுக்கும் உள் பகுதிகளுக்கும் மழை பரவலாகத் தரும்.
ஆனால் புயல் ஒரே இடத்தில் அதிலும் கடற்கரை ஒட்டிய கடலில் நங்கூரமிட்டு கடலில் மையம் கொண்டு சுழன்று கொண்டே இருந்தால் ( உதாரணம் : ஃபெங்கல்)
அல்லது கரையை நோக்கி மிகவும் மந்தமான முறையில் நகர்ந்தால் அது மையம் கொண்டிருக்கும் இடத்திற்கு அருகில் இருக்கும் பகுதிகளுக்கு தீவிரமான மழைப்பொழிவைக் கொடுக்கும்.
இதற்கு புயல் நிலை கூட அவசியமில்லை. பல நேரங்களில் காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் மண்டலங்களே
தீவிர மழைப்பொழிவைக் கொடுக்கின்றன.
2023 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டத்தில் நிகழ்ந்த மழைப்பொழிவு புயலால் ஏற்படவில்லை மாறாக காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் ஏற்பட்டதாகும்.
இவ்வாறு நமது பூமியின் காலநிலை மாற்றத்தால் பூமியின் வெளிப்புறம் வெப்பமடைவதால் முந்தைய காலங்களை ஒப்பிடும் போது புயல்கள் உருவாகும் எண்ணிக்கையில் மாற்றமில்லை.
எனினும் உருவாகும் புயல்கள் சுழற்சி வேகத்தில் தீவிரமடைவதும் நகர்ந்து செல்லும் வேகத்தில் மந்தமாக இருப்பதும் தொடர்ந்து கண்டு வருகிறோம்.
இதன் காரணமாக புயல் என்று உருவானால் ஒன்று அதீத தீவிர காற்றின் வேகத்தினால் பிரச்சனை அல்லது ஒரே இடத்தில் பல மணிநேரங்கள் அதீத மழைப் பொழிவினால் பிரச்சனை என்ற நிலை ஏற்படுகிறது.
புயல் எங்கு கரையைக் கடக்கும் என்பதிலும் இதனால் தான் சரியான உறுதியான தகவல்களை இறுதி வரை கணிக்க இயலாது. அதற்காகவே "CONE OF UNCERTAINTY" எனும் "நிலையில்லாமையின் கூம்பு" என்று அழைக்கிறோம்.
எந்த புயல் என்றாலும் நமக்கு நன்மை தரும் மழையைத் தரட்டும். மக்களுக்கும் பிற உயிர்களுக்கும் பாதிப்பற்ற மழையைத் தரட்டும் என வேண்டிக்கொள்வோம்.

முனைவர் **பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## தினம் ஒரு தலைவர்கள்

# என்.ஜி.ராமசாமி வரலாறு

என். ஜி. ராமசாமி அல்லது கோவை என். ஜி. ராமசாமி [பிறப்பு: 11 மார்ச்சு 1912] [இறப்பு: 12 பெப்பிரவரி 1943] தமிழ் நாட்டின் அன்றைய கோவை மாவட்டத்தின் பீளமேட்டில் பிறந்த இந்திய விடுதலைப்போராட்ட வீரர் ஆவார். கோவை மாவட்டத்தின் முதல் சத்தியாகிரகியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1937-ல் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். கோவை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் நிறுவனத் தலைவராக விளங்கியவர்.

### இளமை

தமிழ்நாட்டின் கோயமுத்தூர் மாவட்டத்தில் 1912- ஆம் ஆண்டு மார்ச் 11ஆம் நாள் ராமசாமி பிறந்தார். தந்தை பெயர் கோவிந்தசாமி, தாயார் சித்தம்மாள். இவரது சிறு வயதிலேயே இவருடைய பெற்றோர்கள் காலமானதால், இவரது அண்ணன் ராஜு என்பவரின் அரவணைப்பில் வளர்ந்தார். 1930-இல் மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரகத்தில் கைதானபோது, இவர் தனது மாணவத்தோழர்களை ஒன்று திரட்டித் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். புரட்சியில் மனம் சென்றாலும் காந்தியின் அகிம்சை, சத்தியம் ஆகிய கோட்பாடுகள் இவரைக் கவர்ந்தன. ராமசாமியும் அவரின் நண்பர்களும் ஒன்றுசேர்ந்து "உண்மை உள்ள கழகம்" என்ற பெயரில் ஒரு சங்கம் நிருவி வாரம் ஒருமுறை ஒளிவு மறைவின்றி தத்தமது கருத்துக்களை வெளியிடும் வழக்கத்தைக் கையாண்டனர். இக்குழுவினர் ஓர் அச்சகத்தையும் நடத்தி வந்தனர்.


### பணி

கோவையின் சரோஜா பஞ்சாலையில் வேலைக்குச் சேர்ந்த ராமசாமி, அங்குள்ள இயந்திரங்களில் பழுது நீக்குவதில் தலைசிறந்த வல்லுநர் என்று பெயர் பெற்றார். அந்த ஆலையில் 'மாஸ்டர்' எனும் தகுதி பெற்றார். மக்களை ஒன்று திரட்டுவதிலும், திறமையாக வழிநடத்திச் செல்வதிலும் சிறந்த பணியாற்றினார். பணியாற்றும்போதே தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு விளங்கினார். தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டவர் என்ற முறையிலும் இவரது தொண்டுகளையும் கண்ட காங்கிரஸ் கட்சி 1937-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் இவரைப் போட்டியிட வைத்தது. இவருக்கு எதிராக வலிமையான போட்டி இருந்தும், காங்கிரஸ் தலைவர்களின் ஆதரவில் இவரே வெற்றி பெற்று தனது 25- ஆம் வயதில் சட்டமன்ற உறுப்பினர் ஆனார். 1937இல் ராஜாஜி தலைமையில் அமைந்த சென்னை சட்டசபையில் இவரே வயதில் இளையவர். இவரது தொழிலாளர் சார்பு நடவடிக்கைகள், தொழிலாளர் நலனையே முதன்மையாகக் கொண்டிருந்தது.

### கொலை முயற்சிகள்

இவரது நடவடிக்கைகள் கோவை ஆலை உரிமையாளர்களுக்கு வருத்தத்தை அளித்தபோதும், அதனைப் பொருட்படுத்தாது இவர் தொழிலாளர் நலனையே முக்கியமாக நினைத்தார். ஆனால் இவரது நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த ஆலை உரிமையாளர்கள் சிலர் இவரை ஒழித்துக் கட்ட முனைந்தனர். அந்த முயற்சியில் தொழிலாளர்களையேப் பயன்படுத்துவது என்றும் முடிவு செய்தனர். அச்சமயத்தில் தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் செய்து வந்தனர். புலியங்குளம் எனும் இடத்தில் ஓர் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்புகையில் சிலர் இவரைத் தாக்கி விட்டு, இறந்துவிட்டார் என்று ஓடிவிட்டனர்.

ஆத்திரமடைந்த தொழிலாளர்களை என். ஜி. ராமசாமி அழைத்து "அமைதியாக இருங்கள். ஆத்திரப்படாதீர்கள். ”கொதிப்பும் ஆத்திரமும் காந்திய கொள்கைகளுக்கு முரணானவை" என்று எடுத்துரைத்தார். அகில இந்திய தொழிலாளர் தலைவர் வி. வி. கிரி அவர்கள் தலையிட்டு வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். 1937-இல் கோவை ஜில்லா சோஷலிச பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் நிருவப்பட்டது. அதற்கு என். ஜி. ராமசாமி துணைத் தலைவராக இருந்தார். சோஷலிசம் என்ற பெயரை அரசாங்கம் ஏற்காததால் அந்தச் சொல்லை நீக்கியே சங்கம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் என். ஜி. ராமசாமி இந்த சங்கத்தின் தலைவராக ஆனார்.
1938-ல் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த கோபால ரெட்டி கலந்து கொள்ளும் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக்கூட்டம் முடிந்து அனைவரும் திரும்பும் வேளையில் என்.ஜி.ஆரை இரும்புத் தடிகள் கொண்டு தாக்கி வீழ்த்தினார்கள். இவர் மருத்துவ மனையில் இரண்டு மாத காலம் சிகிச்சை பெற்றுத் தேறினார். பிறகு 1940இல் உடுமலைப் பேட்டையில் நடந்த கூட்டத்திலும் இவர் தாக்கப்பட்டார். இதில் இவரது தொடை எலும்பு முறிந்தது. நீண்ட நாள் சிகிச்சைக்குப் பின் இவர் தேறினாலும் தனது 28ஆம் வயதிலேயே கைத்தடி கொண்டு நடக்கும் நிலைக்கு ஆளானார்.



### விடுதலைப் போரில் பங்கு

இரண்டாம் உலகப் போர காலத்தில், பிரித்தானியரின் போர் முயற்சிகளுக்கு உதவக்கூடாது என்று சத்தியாக்கிரகம் நடந்தபோது, ராமசாமி கோவை பகுதியில் 1940 ஆகஸ்ட் 22ஆம் தேதி சிங்காநல்லூரில் சத்தியாக்கிரகம் செய்தார். இதனால் சிறைப்பட்டு, வேலூர் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் நோய்வாய்ப்பட்டார். 6 நவம்பர் 1941-இல் சிறை தண்டனை முடிந்து விடுதலையானார்.

இவர் கோவையில் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் மறுபடியும் எதிரிகள் இவரைக் கத்தியால் குத்தி கொல்ல முயன்றனர். தப்பிய ராமசாமி விடுதலைப் போரில் தீவிரமாக ஈடுபட்டார். இவரது தலைமையில் இருந்த தொழிற்சங்கம் மூலம் பல காங்கிரஸ் தலைவர்களை அழைத்துக் கூட்டங்களை நடத்தினார். சுதந்திரப் போராட்ட வேகத்தை அதிகப்படுத்தினார்.

### தொழிலாளர் பிரச்சினைகள்

இந்தச் சூழ்நிலையில் கோவை முருகன் ஆலையில் பகுதிநேர வேலை (ஷிஃப்ட்) தொழிலாளர்களுள் ஒரு பகுதி தொழிலாளர்கள் அனைவரையும் நிர்வாகத்தினர் வேலை நீக்கம் செய்தனர். நீதி கேட்கச் சென்றபோது ராமசாமியும், கே. பி. திருவேங்கடம் எனும் தலைவரும் தாக்கப்பட்டனர். இதன் பயனாகப் பெரும் கலவரம் மூண்டது. ஒரு தொழிலாளி இறந்தார். இதற்கிடையே 1942 ஆகஸ்ட் 8ஆம் தேதி மும்பையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் மகாத்மா காந்தி அவர்கள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை முழக்கினார். பல காங்கிரஸ் தலைவர்கள் இவ்வியக்கத்தில் பங்கெடுத்து கைது செய்யப்பட்டனர். கோவையில் 1942 ஆகஸ்ட் 13ஆம் தேதி ராமசாமியும் கைதானார்.

### இறுதிக்காலம்

வேலூர் சிறையில் இருந்த ராமசாமியின் உடல்நிலை மிகவும் மோசமாகவே, யாராவது கோவையிலிருந்து வந்து அழைத்துப் போகுமாறு சிறை நிர்வாகம் கேட்டுக் கொண்டது. ஆனால் யாரும் போய் அழைத்து வருவதற்கு முன்பே இவரை தொடர்வண்டியில் ஏற்றித் தனியாக அனுப்பிவிட்டது. கோவையில் மயக்க நிலையில் வந்திறங்கிய இவரை மருத்துவர் சிவானந்தம் என்பவர் அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தார். அதன் பிறகு மூன்று மாதங்களே உயிரோடு இருந்த என். ஜி. ராமசாமி தனது 31ஆம் வயதில், 1943 பிப்ரவரி 12ஆம் நாள் கோவையில் விடுதலையைக் காணாமலேயே மறைந்தார். கோவை உப்பிலிபாளையத்தில் இவரது பெயரால் ஒரு பள்ளி இயங்கி வருகிறது. உடுமலைப் பேட்டை நகரின் ஒரு பகுதிக்கு என். ஜி. ராமசாமி என்று பெயர் வைத்துள்ளனர்.

# பொது வேலைநிறுத்தம் - கேரள அரசுப் போக்குவரத்து ஊழியர்கள் முழு ஆதரவு



திருவனந்தபுரம், பிப்.13:

மத்திய அரசின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நாடு முழுவதும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. மின்விநியோகம், காப்பீடு, போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, எரிவாயு, குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பல துறைகளில் பணிபுரியும் சுமார் 30 கோடி தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், 4 தொழிலாளர் சட்டங்களை நீக்கக் கோரி நாடு தழுவிய பொது வேலைநிறுத்ததிற்கு கேரள அரசுப் போக்குவரத்து ஊழியர்கள் முழு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு - கேரளா எல்லையிலுள்ள பாறசாலை அரசுப் போக்குவரத்துக்கழக பணிமனையில் இருந்து தமிழ்நாடு உட்பட கேரளாவின் பல்வேறு பகுதிகளுக்கு இயக்க வேண்டிய அரசு பேருந்துகள் எதுவும் இயக்கப்படவில்லை; கேரளா எல்லை வரையே தமிழக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. பாதியில் நிறுத்தப்படும் பேருந்துகளால் பொதுமக்கள் அவதி அடைந்துள்ளனர்.

# இந்தியாவின் முதல் 'மெல்லிசை சாலை' மும்பையில் திறப்பு; வாகன ஓட்டிகள் பாடல் கேட்டு உற்சாகம்






மும்பை, பிப்.13:

மராட்டிய மாநிலம் மும்பை நரிமண் பாயிண்ட்டில் இருந்து ஓர்லிக்கு வடக்கு நோக்கி செல்லும் கடற்கரை சாலையில் ஒரு புதிய முயற்சியாக இந்தியாவிலேயே முதல் முறையாக 'மெல்லிசை சாலை' அமைக்கப்பட் டுள்ளது. இந்த இசை சாலை உலகிலேயே 5-வது சாலையாக விளங்குகிறது.

இசை சாலையை நேற்று முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ், துணை முதல்-மந்திரி ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் ஹங்கேரி தூதர் பரன் ஜாரி, சிவ சேனா முன்னாள் எம்.பி. ராகுல் செவாலே, மாநகராட்சி கூடுதல் கமிஷனர் அவினாஷ் தக்னே உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் முதல்-மந்திரி பட்னாவிஸ் பேசும்போது, "இந்த கடற்கரை சாலையில் உருவாக்கப்பட்ட இசை சாலை வாகன ஓட்டிகளுக்கு மகிழ்ச்சியான அனுபவத்தை வழங்கும். ஹங்கேரிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட இந்த புதுமையான சாலை, எதிர்காலத்தில் மேலும் செயல்படுத்தப்படும்" என்று அவர் கூறினார்.

இது குறித்து மும்பை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:- ஓர்லியில் இருந்து நிலத்தடி சுரங்கப்பாதையை விட்டு வெளியேறிய பிறகு நரிமண் பாயிண்ட் வரை சாலையில் 500 மீட்டர் நீளத்திற்கு இசை ஒலிக்கும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

வாகனங்கள் மணிக்கு 70 முதல் 80 கி.மீ. வேகத்தில் பயணிக்கும்போது 'ஜெய் ஹோ' பாடலை வாகனத்தின் உள்ளே கேட்கலாம். இந்த முயற்சி மும்பைவாசிகளின் மனதில் தேச பக்தியை எழுப்புகிறது. சாலை மேற்பரப்பில் குறிப்பிட்ட தூரத்தில் ரம்பிள் பட்டைகள் வைக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் இந்த பட்டைகளை கடந்து செல்லும்போது வாகன டயர்களுக்கும். சாலை மேற்பரப்பிற்கும் இடையிலான உராய்வு காரணமாக 'ஜெய் ஹோ' என்ற இசை ஒலி உருவாகிறது. வாகன ஓட்டிகள் மெல்லிசை சாலையில் குறிப்பிட்ட வேகத்தில் சென்றபோது ஜெய்கோ பாடல் கேட்டு உற்சாகம் அடைந்தனர்.

# ககன்யான் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும்: குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லா

புதுடெல்லி, பிப்.13:

பெங்களூரில் புதன்கிழமை நடைபெற்ற இந்திய அமெரிக்க விண்வெளி வர்த்தக அமைப்பின் கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்தபோது, "ககன்யான்' தொடர்பாக செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்து, "ககன்யான்' திட்டத்தின் குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லா கூறியதாவது:

"ககன்யான்' திட்டத்தைப்போல, விண்ணுக்கு மனிதனை அனுப்பியுள்ள உலக நாடுகள் மூன்றுதான். இத்திட்டம் மிகவும் சிக்கலானது மற்றும் சவால்கள் நிறைந்தது. எனினும், துணிச்சலாக இந்தத் திட்டத்தை செயல்படுத்த இந்தியா முனைந்துள்ளது. எத்தனைக் காலம் பிடித்தாலும், முதல்நாளில் இருந்த அதே உற்சாகத்துடன் "ககன்யான்' திட்டத்தை செயல்படுத்துவதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். அந்த உற்சாகம், விண்ணுக்கு மனிதனை அனுப்பும் அந்த நாளிலும் இருக்கும். "ககன்யான்' போன்ற அதிநுட்பமான திட்டங்களில் சிக்கல்களும், சவால்களும் இயல்பானது என்பதை நான் அறிவேன். இந்த திட்டத்தை செயல்படுத்தும்போது பல தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதையும் அறிவேன். அதையெல்லாம் கடந்து, "ககன்யான்' திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும். விண்வெளி ஆராய்ச்சியில் பன்னாட்டு கூட்டிணைவுகள் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்பதற்கு நான் பங்கேற்ற "ஆக்ஸிம்' திட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இது, மற்ற எல்லா துறைகளுக்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்கும். இந்தியா - அமெரிக்கா கூட்டு முயற்சிகள், எதிர்கால கூட்டிணைவுகளுக்கான வாசல்களை திறந்துவிடுகின்றன. காலத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்டு வரும் விண்வெளி ஆராய்ச்சி மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகளில் பெருகிவரும் முதலீடுகளுக்கு இடையே, இந்தியாவின் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசின் ஆதரவு இருப்பது வரவேற்கத்தக்கது. இதுபோன்ற ஆதரவு எதிர்காலத்திலும் தொடரும் என்றார்.

# டிஜிட்டல் மயமாகும் சிபிஎஸ்இ பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணி!

புதுடெல்லி, பிப்.13:

கல்வித்துறையில் மிகப்பெரிய டிஜிட்டல் புரட்சியாக சிபிஎஸ்இ பள்ளிகளில் பிளஸ்2விடைத்தாள்திருத்தும் பணியில்டிஜிட்டல்முறையை அறிமுகப்படுத்தியுள்ளது மத்திய இடைநிலைக் கல்வி வாரியம்(சிபிஎஸ்இ). இந்த புதிய நடைமுறையால், திருத்தப் பிழைகள் குறைவதோடு ஆசிரியர்களுக்கு அலைச்சல் இருக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும்சிபிஎஸ்இ பள்ளிகளில்படிக்கும்பிளஸ்2 மாணவர்களுக்கு பிப்.17 ஆம் தேதி முதல் பொதுத்தேர்வு நடைபெற உள்ளது. இந்த நிலையில், சிபிஎஸ்இ பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணியில்டிஜிட்டல்முறையை ("ஆன்-ஸ்கிரீன் மார்க்கிங்") அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் கீழ் விடைத்தாள்கள் கணினியில் டிஜிட்டல் முறையில் மதிப்பீடு செய்யப்படும் என மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.


இது குறித்து மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் தேர்வுக் கட்டுப்பாட்டாளர் சன்யம் பரத்வாஜ் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், 2026 ஆம் ஆண்டு பிளஸ் 2 தேர்வுக்கான விடைத்தாள்களை கணினி திரையில் பார்த்து திருத்தி மதிப்பெண்வழங்கும்("ஆன்-ஸ்கிரீன் மார்க்கிங்") எனும் புதியடிஜிட்டல்முறையைவசதி அறிமுகப்படுத்தவுள்ளது. அதாவது, மாணவர்களின் விடைத்தாள்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்படும். அதனை ஆசிரியர்கள் கணினி திரை வாயிலாக மதிப்பீடு செய்து மதிப்பெண்களை வழங்குவார்கள்.

# ராணுவ அதிகாரிகள் புத்தகங்களை எழுதுவது குறித்த விதிகளை கடுமையாக்க மத்திய அரசு திட்டம்?

புதுடெல்லி, பிப்.13:

சீன ராணுவ ஆக்கிரமிப்பு குறித்து முன்னாள் ராணுவ தளபதி எம்.எம்.நர வனே தனது சுயசரிதை புத்தகத்தில் எழுதி இருப்பதாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி மக்களவையில் சர்ச்சையை எழுப்பினார். ஆனால் அந்த புத்தகம் இன்னும் வெளியிடப்படவில்லை என்று மத்திய அரசு மறுத்தது.

இதற்கிடையே, புத்தகத்தின் கையெழுத்து பிரதிகளை சட்டவிரோதமாக புழக்கத்தில் விட்டதாக டெல்லி போலீசார் ஒரு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து முன்னாள் ராணுவ தளபதி நரவனே எழுதிய 'போர் ஸ்டார்ஸ் ஆப் டெஸ் டினி' புத்தகத்தின் பிரத்யேக பதிப்புரிமையை நாங்கள் பெற்றுள்ளோம். அந்த புத்தகம் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை; அச்சு வடிவிலோ, டிஜிட்டல் வடிவிலோ எந்த பிரதியும் பொதுமக்களுக்கு வெளியிடப்படவில்லை என்று பெங்குவின் ரேண்டம் ஹவுஸ் இண்டியா புத்தக பதிப்பகம் திட்டவட்டமாக தெரிவித்தது.




எனவே, அச்சு வடிவிலோ, டிஜிட்டல்வடிவிலோ புத்தகத்தை முழுமையாகவோ, பகுதி அளவிலோ வெளியிட்டால், அது பதிப்பு ரிமையை மீறுவதாக அமையும். அத்தகைய நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். அந்த பிரதிகள் பறிமுதல் செய்யப்படும் என்று பெங்குவின் ரேண்டம் தெரிவித்தது. இந்த நிலையில், ஓய்வுபெற்ற மற்றும் பணியில் இருக்கும் ராணுவ அதிகாரிகள் புத்தகங்கள் எழுதுவது குறித்த விதிகளை கடுமையாக்க மத்திய அரசு புதிய விதிமுறைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முன்னாள் ராணுவத் தளபதி நரவணேவின் சுயசரிதை புத்தகம் தொடர்பான சர்ச்சையைத் தொடர்ந்து, தற்போதுள்ள சேவை விதிகள் மற்றும் அதிகாரப்பூர்வ ரகசியங்கள் சட்டம் ஆகியவை உள்ளடக்கிய புதிய விதிகளை அரசு உருவாக்கி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

# தொழிலாளர்கள், விவசாயிகளுடன் நிற்கிறேன்! வேலைநிறுத்தத்துக்கு ராகுல் ஆதரவு!

புதுடெல்லி, பிப்.13:

மத்திய அரசை கண்டித்து நாடு முழுவதும் பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நடத்தும் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆதரவு தெரிவித்துள்ளார்.

4 தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும்; வரைவு விதை மசோதா, மின்சார சட்டத் திருத்த மசோதா, அணுமின் உற்பத்தியில் தனியாரை அனுமதிக்கும் மசோதாவை திரும்பப் பெற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற்சங்கங்களும், விவசாயிகள் விரோத கொள்கைகளை கைவிடக் கோரி விவசாயிகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், தொழிலாளர்கள், விவசாயிகளின் வேலைநிறுத்த போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதாக ராகுல் காந்தி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# பட்ஜெட் தாக்கல் தேதி விரைவில் முடிவு செய்யப்படும் - கர்நாடக முதல்வர் சித்தராமையா

பெங்களூரு, பிப்.13:

பெங்களூரில் புதன்கிழமை பட்ஜெட் தொடர்பாக பல்வேறு துறைகளின் அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பதற்கு முன்னதாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: முதல்வர் மாற்றம் தவிர வேறு எந்த கேள்வியையும் கேட்கமாட்டீர்களா? இந்த விவகாரத்தை தவிர வேறு எதையும் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். இந்த கேள்வியை கேட்க ஆரம்பித்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இந்த கேள்வியை மீண்டும் என்னிடம் கேட்காதீர்கள்.

முதல்வர் மாற்றம் தொடர்பான விவகாரத்தை கட்சி மேலிடம் அறிந்துள்ளது. இதுதொடர்பாக கட்சி மேலிடம் முடிவுசெய்யும். அதற்கு நான் கட்டுப்படுவேன். இதையே எத்தனைமுறை கூறுவது? நானோ (சித்தராமையா) டி.கே. சிவகுமாரோ கட்சி மேலிடம் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்பட வேண்டியவர்கள். இந்த விவகாரம் தொடர்பாக முடிவு செய்ய வேண்டியது கட்சி மேலிடம்தான். இந்த விவகாரம் தவிர, கேட்பதற்கு வேறு எதுவும் ஊடகங்களிடம் இல்லையா? முதல்வர் மாற்றம் தொடர்பாக டி.கே. சிவகுமாரின் சகோதரர் டி.கே. சுரேஷ் கருத்து தெரிவித்திருந்தால், அதுபற்றி அவரிடம் கேட்பதற்கு பதிலாக என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்? கட்சி மேலிடத்தின் முடிவுதான் இறுதியானது. ஒருசில எம்எல்ஏக்கள் சொந்த செலவில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து செல்ல திட்டமிட்டிருந்தால், அதை வேண்டாம் என்று சொல்ல முடியுமா, எம்எல்ஏக்கள், எம்எல்சிக்கள் சொந்த பணத்தில் வெளிநாடு செல்வார்கள். ஆனால், அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. சட்டப் பேரவையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் தேதி விரைவில் முடிவு செய்யப்படும். பிப். 15-ஆம் தேதி சிவராத்திரி கொண்டாட்டம் முடிந்தபிறகு தேதியை அறிவிப்பேன் என்றார்.

# வீட்டுக்குள் நுழைய முயன்ற மர்ம கும்பல்: துப்பாக்கியை காட்டி விரட்டியடித்த இந்தி நடிகர் கோவிந்தா

புதுடெல்லி, பிப்.13:

பிரபல இந்தி நடிகர் கோவிந்தா மும்பை ஜுஹு பகுதியில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இந்த நிலையில் தனது வீட்டை மர்ம நபர்கள் சுற்றி வளைத்ததுடன் உள்ளே நுழைய முயன்றதாகவும், அவர்களை துப்பாக்கியை காட்டி விரட்டியடித்ததாகவும் ஊடகங்களுக்கு நடிகர் கோவிந்தா அளித்த பேட்டி ஒன்றில் அதிர்ச்சி தகவலை வெளியிட்டார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

சமீபத்தில் அதிகாலை 3.30 மணி அளவில் எனது வீட்டை சுற்றி மர்ம நபர்கள் நடமாட்டம் இருப்பதை உணர்ந்தேன். ஜன்னல் வழியாக பார்த்த போது, சுமார் 22 முதல் 23 பேர் கொண்ட கும்பல் எனது வீட்டை முற்றுகையிட்டிருந்தது. அவர்களில் ஒருவன் துணிச்சலாக எனது வீட்டின் மொட்டை மாடி வரை ஏறிவிட்டான். இதைக்கண்டு நான் கடும் அதிர்ச்சியடைந்தேன். நிலைமையின்தீவிரத்தை உணர்ந்த நான், உடனடியாக எனது உரிமம் பெற்ற கைத்துப்பாக்கியை எடுத்துச்சென்று அவர்களை எச்சரித்தேன். அதே நேரத்தில், ஆதாரத்திற்காக அங்கு நடந்தவற்றை எனது செல்போனில் வீடியோவாக பதிவு செய்தேன். அவர்களிடம் கேட்டபோது, மின்சார பழுதுபார்ப்பு பணியாளர்கள் என்று முன்னுக்குப்பின் முரணாக பதில் கூறினார்கள். நள்ளிரவில் ஏன் மொட்டை மாடியில் ஏறினீர்கள்? என்ற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை.

உடனடியாக உதவி கோரி மும்பை போலீசாரை தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால், அவர்கள் எனது அழைப்பை ஏற்கவில்லை. வேறு வழியின்றி, அந்த கும்பலை உரிமம் பெற்ற துப்பாக்கியை காட்டி அங்கிருந்து விரட்டியடித்தேன். கடந்த சில நாட்களாகவே எனக்கு மிரட்டல்கள் வந்தன. எனது நடமாட்டத்தை கண்காணிப்பது போல உணர்ந்தேன். இது திட்டமிட்ட தாக்குதல் முயற்சியாக இருக்குமோ என எனக்கு தோன்றுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து ஜுஹு போலீசில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. நடிகர் கோவிந்தா வழங்கிய வீடியோ ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணை நடத்தி அந்த கும்பலை தேடும் பணியில் போலீசார் முடுக்கிவிடப்பட்டுள்ளனர்.

# 2021-25-ல் பிரதமர் மோடியின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு ரூ.462 கோடி செலவு!

புதுடெல்லி, பிப்.13:

கடந்த 2021 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி சுமார் 43+ வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதற்காக ரூ.462.58 கோடி செலவாகி உள்ளதாக அரசு தரவுகளில் தகவல்.

கடந்த 2025-ம் ஆண்டு பிப்ரவரியில் பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றிருந்தார். அந்த பயணத்துக்காக ரூ.25.5 கோடி செலவாகி உள்ளது. அந்த பயணத்தில் ஏஐ மாநாடு, பிரான்ஸ் அதிபர் ஏற்பாடு செய்த இரவு விருந்து, பல்வேறு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள் பங்கேற்ற நிகழ்வு, பிரான்ஸின் மார்சேயில் தூதரகம் திறப்பு விழா நிகழ்வு உள்ளிட்டவற்றில் பங்கேற்றார். 2021-25 காலகட்டத்தில் பிரதமர் மோடி மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களில் அதிக தொகை செலவிட்டது இந்த பயணத்துக்காக தான் என தகவல்.

இதற்கு அடுத்தபடியாக அதிக செலவான பயணப் பட்டியலில் கடந்த 2023-ம் ஆண்டு ஜூன் மாதம் பிரதமர் மோடி அமெரிக்கா சென்றது இடம்பெறுகிறது.

அந்தப் பயணத்துக்காக ரூ.22.8 கோடி செலவிடப்பட்டுள்ளது. இந்த பயணத்தில் அப்போதைய அமெரிக்க அதிபர் உடன் பத்திரிகையாளர்களை பிரதமர் மோடி சந்தித்தார். மேலும், அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தின விழாவிலும் பங்கேற்றார். இதே போல கடந்த 2021 செப்டம்பரில் பிரதமர் மோடியின் அமெரிக்க பயணத்துக்காக ரூ.19.6 கோடி செலவாகி உள்ளது.

2021-25 காலகட்டத்தில் பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணத்துக்கு ஒட்டுமொத்தமாக செலவான ரூ.462.58 கோடியில் 16 சதவீதம் அமெரிக்க நாட்டு பயணத்துக்காக (4 முறை பயணம்) செலவாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பிரான்ஸ் மற்றும் ஜப்பான் பயணத்துக்கு தலா 9 சதவீதம் செலவாகி உள்ளது.

# பிரதமரின் ஆதரவுக்குப் பிறகும் வடமாநிலங்களில் தமிழுக்குச் சிக்கல்!

புதுடெல்லி, பிப்.13:

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் தமிழை வளர்ப்பதற்காக பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. தமிழ்நாட்டுக்கு வெளியேயும் தமிழ் பாடங்கள் நடத்த குறிப்பிட்ட தொகை வைப்பு நிதியாக அளிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் அசாம், உ.பி., ஆந்திரா, கேரளா, ஒடிசா போன்ற மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் போதிக்கப்படுகிறது. கடந்த 1977- 78 நிதியாண்டில் தலா ரூ.3 லட்சம் நிதியுதவியுடன் வாராணசியின் பழமையான 3 பல்கலைக்கழகங்களில் தமிழ் பாடங்கள் போதிக்க முடிவு செய்யப்பட்டது. இவற்றில் பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் (பிஎச்யு) மட்டுமே சில ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு மீண்டும் தமிழை போதிக்கிறது. சம்பூர்ணானந்த் சம்ஸ்கிருதப் பல்கலைக்கழகம், காசி வித்யாபீடம் ஆகியவற்றுக்கு நிதி அளித்தும் பலன் இல்லை. ஆந்திராவின் குப்பம் நகரின் திராவிடன் பல்கலைக்கழகம், திருப்பதி ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்திலும் தமிழ் பேராசிரியர்களுக்கான 4 பணியிடங்கள் காலியாகவே உள்ளன.

இது குறித்து தமிழ் வளர்ச்சித்துறை முன்னாள் இயக்குநரும், தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவருமான கணையாழி மா.இராசேந்திரன் கூறுகையில், "சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்தி, சம்ஸ்கிருதம் உள்ளிட்ட வடமொழிகளுக்காக தமிழ்நாடு அரசே செலவிடுவது போல், பிற மாநிலங்களில் தமிழ் போதிக்க அந்தந்த மாநில அரசுகளே முன்வர வேண்டும்.

மேலும், காசி தமிழ்ச் சங்கமம் 4.0-வில் வாராணசி பள்ளிகளில் பிரதமர் நரேந்திர மோடி யோசனையின் பேரில் குறுகிய நாட்களுக்காக தமிழ் மொழி கற்பிக்கப்பட்டது. கூடுதலாக ஏற்கெனவே உ.பி. உள்ளிட்ட மாநில உயர்கல்வி நிலையங்களில் போதிக்கப்பட்ட தமிழுக்கான தடையை பிரதமர் மோடி தலையிட்டு நீக்கலாம்" என்றார்.

# தொழிலாளர்கள், விவசாயிகளுடன் நிற்கிறேன்!: ராகுல் ஆதரவு!

புதுடெல்லி, பிப்.13:

மத்திய அரசை கண்டித்து நாடு முழுவதும் பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நடத்தும் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆதரவு தெரிவித்துள்ளார்.

4 தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும்; வரைவு விதை மசோதா, மின்சார சட்டத் திருத்த மசோதா, அணுமின் உற்பத்தியில் தனியாரை அனுமதிக்கும் மசோதாவை திரும்பப் பெற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற்சங்கங்களும், விவசாயிகள் விரோத கொள்கைகளை கைவிடக் கோரி விவசாயிகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், தொழிலாளர்கள், விவசாயிகளின் வேலைநிறுத்த போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதாக ராகுல் காந்தி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# சபரிமலை தங்கக் கவச முறைகேடு வழக்கு - தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவர் ஜாமீனில் விடுவிப்பு

திருவனந்தபுரம், பிப்.13:

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக் கவச முறைகேடு வழக்கில் அக்கோயிலை நிர்வகிக்கும் திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவர் என்.வாசு புதன்கிழமை ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

கேரள இடதுசாரி அரசின் உயர்நிலைத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவராக கருதப்படும் இவர், இந்த வழக்கில் ஜாமீனில் விடுவிக்கப்பட்ட 5-ஆவது நபராவார்.

சபரிமலை ஐயப்பன் கோயில் துவார பாலகர் சிலைகள் மற்றும் கருவறைக் கதவுகளின் தங்க கவசங்கள் கடந்த 2019-இல் புதுப்பிக்கப்பட்ட பிறகு அவற்றின் எடை குறைந்ததாகப் புகார் எழுந்தது. இது குறித்து கேரள உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில் இரு வழக்குகளைப் பதிவு செய்து, காவல் துறையின் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) விசாரணை மேற்கொண்டு வருகிறது.




## அதிமுக நிர்வாகிகள் உள்பட 4 பேருக்கு கத்திக் குத்து – கோவையில் இருவர் கைது

**கோவை, பிப்.13:** கோவை ஒண்டிப்புதூர் எம்.ஆர்.ஆர்.லேஅவுட் பகுதியைச் சேர்ந்தவர் சுரேஷ்குமார் (54). அதிமுக நிர்வாகியான இவர், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். கடந்த 5-ம் தேதி, சுரேஷ்குமார், ஒண்டிப்புதூர் சுங்கம் மைதானம் அருகே நின்று கொண்டிருந்தார்.

அப்போது, இவருக்கும் ஒண்டிப்புதூர் ராமச்சந்திரா வீதியைச் சேர்ந்த முருகேசன் (51), என்பவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. கடந்த 9-ம் தேதி இருதரப்பினரிடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது.

அப்போது, முருகேசன் (51), அவரது நண்பர்கள் போயர் வீதியைச் சேர்ந்த தம்பிதுரை (42), அனிஷ் ஆகியோர், சுரேஷ்குமார், அவரது நண்பர்களான, அதிமுக நிர்வாகி ஈஷா செந்தில்குமார் மற்றும் சிவக்குமார், சிவராம் ஆகியோரை கத்தியால் குத்தி விட்டு தப்பிச் சென்றனர்.

அக்கம் பக்கத்தினர், அவர்களை மீட்டுஅருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். இச்சம்பவம் தொடர்பாக சுரேஷ்குமார் அளித்த புகாரின்பேரில், முருகேசன், அனிஷ், தம்பிதுரை ஆகியோர் மீது சிங்காநல்லூர் போலீஸார் வழக்குப்பதிந்தனர். பின்னர் முருகேசன், தம்பிதுரை ஆகியோரை கைது செய்தனர். தலைமறைவாக உள்ள அனிஷை தேடி வருகின்றனர்.

## சென்னை | கோயில் நிலத்தை விற்று ரூ.2,500 கோடி மோசடி: தனியார் கட்டுமான நிறுவனம் மீது போலீஸில் புகார்

**சென்னை, பிப்.13:** அம்பத்தூரில் கோயில் நிலத்தை தனியார் நிலம் என பொய் கூறி விற்று, 2,036 குடும்பங்களிடம் தனியார் கட்டுமான நிறுவனம் ரூ.2,500 கோடிக்கும் மேல் மோசடி செய்ததாக சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் குடியிருப்புவாசிகள் புகார் கொடுத்துள்ளனர்.

இதுகுறித்து, குடியிருப்புவாசிகள், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அளித்த புகாரில் கூறப்பட்டுள்ளதாவது: தெளிவான பட்டா, வில்லங்கம் இல்லாத நிலம் என்று தனியார் கட்டுமான நிறுவனத்தின் விளம்பரத்தை நம்பி, அம்பத்தூரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புத் திட்டத்தில் 2,036 குடும்பங்கள் தங்களது வாழ்நாள் சேமிப்பு மற்றும் வங்கிக் கடன்கள் மூலம் பல கோடி ரூபாய் முதலீடு செய்து வீடுகளை வாங்கியுள்ளன.

இந்த நிலையில், அந்த நிலம் தனிநபர் சொத்து அல்ல. கடந்த 1974-ம் ஆண்டிலேயே நீதிமன்றத் தீர்ப்பின்படி, அது இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஸ்ரீகர பாத்ர சிவபிரகாச சுவாமிகள் சன்னதி நிலையம் என்ற கோயில் சொத்து என்பது உறுதியாகியுள்ளது.

கட்டுமான நிறுவனம் 2006-ல் தற்காலிகமாகப் பெற்ற பட்டாவை, வருவாய்த் துறை அதிகாரிகள் நிலத்தின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து கடந்த 2015, 2016, 2018-ல் அடுத்தடுத்து ரத்து செய்துள்ளனர். ஆனாலும், உண்மையை மறைத்து, ரத்தான பட்டாவை வைத்துக் கொண்டு பொதுமக்களை அந்த நிறுவனம் ஏமாற்றியுள்ளது.

இந்த சூழலில், கடந்த ஜனவரி மாதம் முதல் இந்த நிலத்தை கோயில் நிலம் எனப் பதிவுத் துறை வகைப்படுத்தியுள்ளதால், வீடுகளைப் பதிவு செய்யவோ, அடமானம் வைக்கவோ, விற்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ரூ.2,500 கோடி வரை பணத்தை கொடுத்து வீடு வாங்கியவர்கள், இன்று கடும் அவதிக்கு ஆளாகி உள்ளனர்.

வீடுகளைத் தவிர்த்து, மக்களிடம் பராமரிப்புக்காக வசூலித்த 'கார்பஸ் ஃபண்ட்' ரூ.30 கோடி, கிளப் ஹவுஸ் வைப்புத் தொகை ரூ.30 கோடி என மொத்தம் ரூ.60 கோடியையும் நிறுவனம் முறைகேடாக பயன்படுத்தி உள்ளது.

எனவே, கட்டுமான நிறுவனத்தின் சொத்துகளை உடனே கைப்பற்றி, எங்கள் பணத்தை மீட்டுத் தரவேண்டும். இவ்வாறு புகாரில் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து, சென்னை குற்றப்பிரிவு போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## புற்றுநோய் பாதிப்பால் குடும்பத்துடன் தற்கொலை முயற்சி: பெரம்பூரில் தந்தை, மகன் பரிதாப உயிரிழப்பு

**சென்னை, பிப்.13:** பெரம்பூரில் தனியார் ஊழியர் குடும்பத்துடன் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தந்தையும், 4 வயது மகனும் உயிரிழந்த நிலையில், தாயும் மகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சென்னை பெரம்பூர் சங்கர மடம் பகுதியில் வசித்து வந்தவர் சகாய செபஸ்டின் (43). கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தைச் சேர்ந்த இவர், மாதவரத்தில் உள்ள தனியார் நிறுவன கிடங்கில் கணக்காளராகப் பணியாற்றி வந்தார்.

இவரது மனைவி ரெக்சி பியூலா (38). மகள் இவாஞ்சலின் அல்வினா (8), மகன் யுவான் அண்டோ (4). சில மாதங்களுக்கு முன்பு பியூலாவுக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது.

இதனால், செபஸ்டின் கடந்த சில நாட்களாக கடும் மன உளைச்சலில் இருந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை அருகே உள்ள பேக்கரியில் இருந்து கேக் வாங்கிய செபஸ்டின், வீட்டில் யாருக்கும் தெரியாமல் அதில் பூச்சிக்கொல்லி மருந்தைக் கலந்து, அதன் மேல் 'ஹேப்பி ஃபேமிலி டே' என எழுதிவைத்து குடும்பத்தினருடன் கேக் வெட்டி சாப்பிட்டுள்ளார்.

சிறிது நேரத்தில், மகன் யுவான் அண்டோ மயங்கி விழுந்து உயிரிழந்தார். மனைவி பியூலாவும், மகள் இவாஞ்சலினும் அடுத்தடுத்து மயங்கி விழுந்தனர். அவர்களும் உயிரிழந்து விட்டதாக நினைத்த செபஸ்டின், மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

நேற்று காலை 8 மணி அளவில் மயக்கம் தெளிந்த சிறுமி, காவல் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு பேசியுள்ளார். செம்பியம் காவல் ஆய்வாளர் சிரஞ்சீவி தலைமையிலான போலீஸார் விரைந்து வந்து, இருவரையும் மீட்டு பெரியார் நகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர்.

பியூலா உயிருக்கு ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இவாஞ்சலின் அபாய நிலையைத் தாண்டியுள்ளதாக மருத்துவர்கள் கூறினர். செம்பியம் போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

தற்கொலை தீர்வல்ல: தற்கொலை என்பது எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு அல்ல. தற்கொலை எண்ணம் தோன்றினால் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக 'சினேகா' தற்கொலை தடுப்பு உதவி எண்: 044-24640050, மாநில தற்கொலை தடுப்பு உதவி எண்: 104, ஐகால் (ICALL PSYCHOSOCIAL) உதவி எண் - 022-25521111 ஆகிய எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

## ஊட்டியில் கடும் உறைபனி தாக்கம் நீடிப்பு – குளிரால் பொதுமக்கள் அவதி



**ஊட்டி, பிப்.13:** நீலகிரி மாவட்டத்தின் தலைநகரான ஊட்டி, பிப்ரவரி மாதத்தின் இரண்டாவது வாரத்திலும் தொடரும் கடும் உறைபனி தாக்கத்தால், 'குட்டி காஷ்மீர்' போல் காட்சியளிக்கிறது.

ஊட்டியில் குறைந்தபட்ச வெப்பநிலை 3 டிகிரி செல்சியஸ் ஆக பதிவாகியுள்ளது. அதே நேரத்தில், காந்தல், தலைகுந்தா, அவலாஞ்சி உள்ளிட்ட உயரமான மலைப்பகுதிகளில் வெப்பநிலை 0 டிகிரி செல்சியஸ் வரை சரிந்து, கடும் குளிர் நிலவுகிறது.

அதிகாலை நேரங்களில் புல்வெளிகள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் வீடுகளின் கூரைகள் முழுவதும் வெண்மையாக உறைந்த பனிப்படலத்தால் மூடப்பட்டு, சுற்றுப்புறம் முழுவதும் கண்கவர் காட்சியாக மாறியுள்ளது.

தொடர்ந்து நிலவும் கடும் குளிர் காரணமாக, பொதுமக்கள் வெளியே செல்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர். குறிப்பாக முதியோர், குழந்தைகள் மற்றும் தினசரி வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் விவசாயிகளும் அதிகாலையில் ஏற்படும் உறைபனி காரணமாக பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

இவ்வாறு, பிப்ரவரி மாதம் தொடங்கிய பின்னும் குறையாத உறைபனி தாக்கம் காரணமாக, ஊட்டியில் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

## அவிநாசி அருகே அடையாளம் தெரியாத நபர் அடித்துக் கொலை!



**அவிநாசி, பிப்.13:** அவிநாசி அருகேசின்னேரிபாளையத்தில் அடையாளம் தெரியாத நபர் கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திருப்பூர் மாவட்டம் அவிநாசி அருகேசின்னேரிபாளையத்தில் அடையாளம் தெரியாத நபர் கொலை செய்யப்பட்ட நிலையில் இருசக்கர வாகனத்துடன் கிடப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீஸார், அங்குக் கல்லால் அடித்து முகங்கள் சிதைந்த நிலையில் 55 வயது மதிக்கத்தக்க நபர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதும், அவரை மர்ம நபர்கள் தலையில் கல்லால் அடித்துக் கொலை செய்துள்ளதும் தெரிய வந்தது.

மேலும் அவர் யார் எந்த ஊரைச் சேர்ந்தவர் , கொலைக்கான காரணம் உள்ளிட்டவை குறித்து போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த தடயவியல் நிபுணர்கள் உடலைக் கைப்பற்றி, சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருவாரூர்: பழுதாகி நின்ற அரசு பேருந்தை தள்ளிச் சென்ற பள்ளி மாணவர்கள்




**திருவாரூர், பிப்.13:** புத்தகத் திருவிழாவுக்கு அரசுப் பள்ளி மாணவர்களை ஏற்றி வந்த அரசுப் பேருந்து சாலையில் பழுதாகி நின்றதால், திருவாரூரில் மாணவர்கள் பேருந்தை தள்ளிச் சென்ற வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

திருவாரூர் மாவட்ட 4-வது புத்தகத் திருவிழா பவித்திர மாணிக்கம் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கடந்த 8-ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது.

வரும் 17-ம் தேதி வரை நடைபெற உள்ள இந்த புத்தகத் திருவிழாவுக்கு, மாவட்டம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவ, மாணவிகள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். இதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் அரசுப் பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டு, மாணவ, மாணவிகள் புத்தகத் திருவிழாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் மீண்டும் பள்ளிகளில் கொண்டு சென்று விடப்படுகின்றனர்.

இந்நிலையில், புத்தகத் திருவிழாவுக்கு கடந்த 9-ம் தேதி அரசுப் பள்ளி மாணவர்கள் அரசுப் பேருந்தில் வந்து புத்தகக் காட்சியைப் பார்த்து விட்டு திரும்பச் சென்றபோது, அரசுப் பேருந்து சிறிது தூரத்தில் பவித்திர மாணிக்கம் பகுதியில் பழுதாகி சாலையோரத்தில் நின்றுள்ளது.

இதையடுத்து, பள்ளி மாணவர்கள் அந்தப் பேருந்தை சிறிது தூரம் தள்ளிச் சென்றும் பேருந்து ஸ்டார்ட் ஆகாததால், சாலையோரத்தில் நிறுத்தப்பட்டது. இதற்கிடையில், அரசுப் பள்ளி மாணவர்கள் அரசுப் பேருந்தை தள்ளிச் செல்லும் வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

இதுகுறித்து தகவலறிந்த மாவட்ட ஆட்சியர் மோகனசந்திரன், புத்தகத் திருவிழாவுக்கு அனுப்பும் பேருந்துகளை முழுமையாக ஆய்வு செய்த பின்னரே அனுப்ப வேண்டும் என்று போக்குவரத்துத் துறைக்கு உத்தரவிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## முடி மாற்று சிகிச்சை மையங்களுக்கு கட்டுப்பாடு: சுகாதாரத் துறை அதிகாரிகள் தகவல்



**சென்னை, பிப்.13:** தமிழகம் முழுவதும் உள்ள முடிமாற்று சிகிச்சை மையங்களை கட்டுப்பாட்டில் கொண்டுவர மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

சென்னை அண்ணா நகர் பகுதியில் அமைந்துள்ள 'மிஸ்டர் ஹேர்' என்ற சிகை சீரமைப்பு சிகிச்சை நிலையத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை (டிஎம்எஸ்) அதிகாரிகள் கடந்த 10-ம் தேதி ஆய்வு நடத்தினர்.

அப்போது, பிளஸ் 2 படித்த 2 பேர் மருத்துவர்கள் என்ற பெயரில் முடி மாற்று சிகிச்சைகளைமேற்கொண்டது கண்டறியப்பட்டது. காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டதை தொடர்ந்து, அவர்கள் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது, தற்போதைய நிலையில் தமிழகம் முழுவதும் இதுபோல் செயல்படும் சிகிச்சை மையங்களை முறைப்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் நடைமுறை சிக்கல்கள் உள்ளன, இதனால் சிலர் இம் மையங்களை பதிவு செய்யாமல் நடத்தி வருவது மட்டுமின்றி, பள்ளி படிப்பை கூட முடிக்காதவர்கள்கூட சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இது தொடர்பாக அதிகாரிகள் கூறியதாவது: தலைமுடி உதிர்வதை மிகப்பெரிய அவமானமாகக் கருதும் சூழல் தற்போது உள்ளது. இதுபோல் போலி மருத்துவர்களை நம்பி சிகிச்சைக்கு செல்லும் பெரும்பாலோனர் படித்த பட்டதாரிகளாக உள்ளனர்.

கிளினிக் அல்லது மருத்துவமனை தொடங்க மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறையில் பதிவு செய்வது கட்டாயம் ஆகும். அதன் அடிப்படையில் அவர்களுக்கு உரிமம் வழங்கப்படும். அந்த மருத்துவ மையங்கள் தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும்.

உயிரிழப்பு அபாயம்: ஆனால், முடி மாற்று சிகிச்சை மையங்கள், அழகு நிலைய அடையாளத்துடன் பல இடங்களில் செயல்படுகின்றன. இதனால் அவை எங்களுடைய கட்டுப்பாட்டில் வருவதில்லை. இதனை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி கொள்ளும் போலி மருத்துவர்கள் பலர் சிகிச்சை அளிக்கின்றனர். இதுபோன்ற தவறான சிகிச்சைகளால் உயிரிழப்பு ஏற்படலாம். எனவே, அங்கீகாரம் பெறாத சிகிச்சை மையங்களையும் எங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## சாதி பெயர்களை நீக்கும் அரசாணையில் குறைபாடு: உயர் நீதிமன்றம் கருத்து



**மதுரை, பிப்.13:** தமிழகத்தில் சாலைகள், தெருக்கள், நீர்நிலைகளின் சாதியப் பெயர்களை நீக்கக் கோரிய அரசாணையில் குறைபாடு இருப்பதாக தெரிவித்த உயர் நீதி மன்ற மதுரை அமர்வு, அது எப்போது சரி செய்யப்படும் என்று கேள்வி எழுப்பியுள்ளது.

மதுரையைச் சேர்ந்த பரமசிவம், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு வில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள், நீர் நிலைகளுக்கு வைக்கப்பட்டுள்ள சாதிப் பெயர்களை நீக்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கி, தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

அதன்படி, கிராமங்கள், குடியிருப்புகள், சாலைகள், தெருக்கள், நீர் நிலைகளின் சாதிப் பெயர்களை நீக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்காலனி, ஹரிஜன் குடியிருப்பு, வண்ணான்குளம் போன்ற சாதிப்பெயர்களை நீக்குதல், புதிய பெயரிடும் பணிகளை நவ. 19-ம் தேதிக்குள் முடிக்க உத்தரவிடப்பட்டது.

இந்த நடைமுறையில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. எனவே, இந்த அரசாணைக்குத் தடை விதித்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, அரசாணையைச் செயல்படுத்த தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த மனு மீண்டும் நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், அரசாணை அடிப்படையில் 45 நாட்களில் தமிழகம் முழுவதும் உள்ள சாலைகள், தெருக்கள், ஊரின் பெயர்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களின் பெயரை மாற்றுவது நடைமுறையில் சாத்தியமானது அல்ல.

எனவே, தெளிவு இல்லாமலும், போதிய அவகாசம் வழங்கப்படாமலும் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

அரசுத் தரப்பில், "அந்த அரசாணையில், குறிப்பிட்ட காலத்துக்குள் ஒவ்வொரு பணியையும் முடிக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்தான் உள்ளன. எனவே, தடையை விலக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், "நீதிமன்றம் அரசின் கொள்கை முடிவில் தலையிட முடியாது. ஆனால், இந்த அரசாணையில் குறைபாடுகள் உள்ளன.

நடைமுறைப்படுத்துவதிலும் சில கேள்விகள் எழுகின்றன. அவற்றை எவ்வாறு சரி செய்வீர்கள் என்று நீதிமன்றம் அறிய விரும்புகிறது.

பிப். 23-க்கு தள்ளிவைப்பு: மேலும், சாதிப் பெயர்களை நீக்குவது குறித்து 1978-ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அரசாணை அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் அரசுத் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை பிப். 23-ம் தேதிக்கு தள்ளி வைக்கப்படுகிறது" என்று உத்தரவிட்டனர்.

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 12 கோவில்களில் சிவராத்திரி விழா!



**ராமேஸ்வரம், பிப்.13:** சிவபெருமானுக்குரிய முக்கிய விரத வழிபாடுகளில் ஒன்றான மகா சிவராத்திரியில் சிவனை வழிபட்டால் பல விதமான துன்பங்களில் இருந்தும் விடுபடலாம் என்பது நம்பிக்கை.

அன்றைய தினம் சிவ பக்தர்கள் இரவு முழுவதும் தூங்காமல் கண் விழித்து இருந்து, சிவ நாமத்தை உச்சரித்தபடி சிவனை வழிபடுவார்கள்.

ஒவ்வொரு மாதமும் சிவராத்திரி தினம் வந்தாலும், மாசி மாதத்தில் வரும் தேய்பிறை சதுர்த்தசி நாளையே, 'மகா சிவராத்திரி' என்று போற்றி வணங்குகிறோம். இந்த ஆண்டு மகா சிவராத்திரி வரும் 15-ந்தேதி கொண்டாடப்பட உள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் உள்ள 12 கோவில்களில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் சிவராத்திரி விழா கொண்டாடப்பட உள்ளது. வரும் 15-ந்தேதி 12 கோவில்களில் சிவராத்திரி விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 9 கோவில்களில் சிவராத்திரி விழா நடைபெற்ற நிலையில் இந்த ஆண்டு 12 கோவில்களில் சிவராத்திரி விழா நடத்தப்படுகிறது.

ராமேஸ்வரம் ராமநாதசாமி கோவில், விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் கோவில், திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி கோவில் உள்ளிட்ட 12 கோவில்களில் சிவராத்திரி விழா நடைபெற உள்ளது.

# மஹா காளியம்மன் கோயில் கும்பாபிஷேகம்: திரளானோர் பங்கேற்பு!



**தஞ்சாவூர், பிப்.13:** தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா சந்தானபுரம் கிராமத்தில் ஸ்ரீ மஹா காளியம்மன் கோயில் அமைந்துள்ளது. சுற்றுவட்டாரப் பகுதிகளில் மிகவும் பிரசித்தி பெற்ற இந்த ஆலயத்தில் கும்பாபிஷேக திருப்பணிகள் பல லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று முடிவுற்ற நிலையில், கடந்த 10 ஆம் தேதி கணபதி ஹோமம், மகாலட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம் உள்பட பூர்வாங்க பூஜைகளுடன் யாகசாலை பூஜைகள் தொடங்கியது.

காலை நான்காம் கால பூஜைகள் நிறைவு பெற்று மேள, தாளங்களுடன் வேத மந்திரங்கள் முழங்க, கடம் புறப்பாடு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க ஸ்ரீ மஹா காளியம்மன் கோபுர கலசத்திற்குப் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்று, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து பக்தர்களுக்கு அருள் பிரசாதம் வழங்கப்பட்டது.

கும்பாபிஷேக நிகழ்ச்சியில் சந்தானபுரம் கிராமத்தினர், நாட்டாண்மை மற்றும் திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

# பரந்தூர் விமான நிலைய நில அளவைக்கு லஞ்சம்: நில அளவையரை கைது செய்து போலீஸார் நடவடிக்கை

**காஞ்சிபுரம், பிப்.13:** பரந்தூர் பசுமைவெளி விமான நிலையத் திட்டத்துக்காக நிலத்தை அளவீடு செய்ய ரூ.50,000 லஞ்சம் வாங்கிய நில அளவையரை காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு போலீஸார் நேற்று கைது செய்தனர்.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ரஞ்சித் குமார் என்பவருக்குச் சொந்தமான நிலம் பரந்தூர் பகுதியில் உள்ளது. இந்தப் பகுதி பசுமைவெளி விமான நிலையத் திட்டத்துக்காக கையகப்படுத்தப்பட உள்ள நிலையில், தனது நிலத்தை அளவீடு செய்து தருமாறு ரஞ்சித் குமார் விண்ணப்பித்திருந்தார்.


இதற்காக, பரந்தூர் விமான நிலைய திட்ட நில எடுப்பு அலுவலகத்தில் நில அளவையராகப் பணியாற்றி வரும் சுந்தர வடிவேலு (46) என்பவரை அவர் அணுகியுள்ளார்.

நிலத்தை அளவீடு செய்ய சுந்தர வடிவேலு ரூ.50,000 லஞ்சம் தருமாறு ரஞ்சித் குமாரிடம் கேட்டுள்ளார். நிலத்தை அரசிடம் ஒப்படைக்கும் நிலையிலும் லஞ்சம் கேட்கப்பட்டதால் அதிர்ச்சியடைந்த ரஞ்சித் குமார், இது குறித்து காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு போலீஸாரிடம் புகார் அளித்தார்.

போலீஸாரின் அறிவுறுத்தலின்படி, ரசாயனம் தடவிய ரூ.50,000 பணத்தை ரஞ்சித் குமார் நேற்று காஞ்சிபுரம் செங்கழுநீரோடை வீதியில் உள்ள சூப்பர் மார்க்கெட் அருகே சுந்தர வடிவேலுவிடம் கொடுத்துள்ளார்.

அப்போது அங்கு மறைந்திருந்த ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு டிஎஸ்பி கலைச்செல்வன், இன்ஸ்பெக்டர்கள் கீதா, தேவநாராயணன் மற்றும் போலீஸார், லஞ்சப் பணத்தை பெற்ற சுந்தர வடிவேலுவை கைது செய்தனர். அவர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தனர்.

# என்எல்சி நிறுவனத்தில் ரூ.442 கோடி முறைகேடு: சிபிஐ விசாரணை நடத்த ஐகோர்ட் உத்தரவு



**சென்னை, பிப்.13:** என்.எல்.சி. நிறுவனத்தில் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கியதில் நடந்த 442 கோடி ரூபாய் முறைகேடு குறித்து புகார்தாரரிடம் ஆதாரங்களைப் பெற்று விசாரணை நடத்த சிபிஐ-க்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில், பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை வழங்கியதில், 442 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடுகள் நடந்து உள்ளதாகக் கூறி, கடலூரைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் சிபிஐ-யிடம் புகார் அளித்துள்ளார்.

எந்த நடவடிக்கையும் எடுக்காததால், தனது புகார் மீது வழக்குப்பதிவு செய்ய சிபிஐ-க்கு உத்தரவிடக் கோரி மணிகண்டன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அதில், சாம்பல் விற்பனை, ஒப்பந்த விதிகளுக்கு மாறாக, காலாவதியான டெண்டர்களின் காலத்தை நீட்டித்தது; 73,000 டன் அளவுக்கு செம்மண்ணை சட்டவிரோதமாக அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் என்.எல்.சி. அதிகாரிகள் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த மனு நீதிபதி எம்.நிர்மல் குமார் முன் விசாரணைக்கு வந்த போது, புகார்தாரர் தனது புகார் தொடர்பான முழு ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், விசாரணைக்கு அழைத்தும் ஆஜராகவில்லை என்றும் சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு முகாந்திரம் இல்லாமல், நேரடியாக வழக்குப்பதிவு செய்ய முடியாது எனத் தெரிவித்த நீதிபதி, என்.எல்.சி. உயர் அதிகாரிகளுக்கு எதிரான புகாருக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதேபோல, சிபிஐ விசாரணைக்கு அழைத்தால் ஆஜராகி, ஆதாரங்களை சமர்ப்பித்து, விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் மனுதாரருக்கு உத்தரவிட்ட நீதிபதி, ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணை நடத்தி, சட்டப்படி நடவடிக்கை எடுக்க சிபிஐ-க்கு உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.




# தி.மு.க. கூட்டணிக்கு காங்கிரஸ் வந்தால் வரட்டும்– அமைச்சர் ராஜகண்ணப்பன்

**மதுரை, பிப்.13:** மதுரை மாவட்டம் மேலூர், ஆனையூரில் தி.மு.க. சார்பில் 'தமிழ்நாடு தலை குனியாது' என்ற தலைப்பில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றது. இதில் அமைச்சர் ராஜகண்ணப்பன் கலந்து கொண்டு பேசியதாவது:-

வருகிற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.விற்கும், தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் இடையே தான் போட்டி. தேர்தல் கூட்டணி குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்த்து கொள்வார். அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். காங்கிரஸ் கட்சி வந்தால் வரட்டும். ஆனால் அந்த கட்சி வேண்டாமென்று சொல்லவில்லை.

விஜயகாந்த் இருந்தபோது தே.மு.தி.க. எதிர்க்கட்சியாக இருந்தது. மக்களிடமும் செல்வாக்கு இருந்தது. ஆனால் இன்று தே.மு.தி.க. இரு கட்சியினருடமும் கூட்டணி குறித்து பேசுகிறார்கள். இங்கேயும் அங்கேயும் பேசுவது சரியாக இருக்காது. விஸ்வாசமாக இருந்து தே.மு.தி.மு.க. ஒரு பக்கம் வரவேண்டும்.

த.வெ.க. பெரிய கட்சியாக இருக்கும் என்று நினைத்தேன். அதில் இருப்பவர்கள் எல்லாம் 15 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். தி.மு.க.வில் இருந்து அரசியல் செய்தார். 55 ஆண்டு காலம் அரசியல் அனுபவம் உள்ளவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

தி.மு.க. இயக்கம் தொடர்ந்து இயங்க வேண்டும். 2-வது முறையாக மு.க.ஸ்டாலின் முதலமைச்சர் ஆவார். எடப்பாடி வியாபாரம் செய்து வந்தவர். தற்போது பா.ஜ.க.விடம் சிக்கிக் கொண்டுள்ளார். தமிழகத்தில் பா.ஜ.க.வால் காலூன்ற முடியாது.

தென் மாவட்டத்தில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தன்னை பெரிய ஆளாக நினைத்து கொள்கிறார். அவர் பெரிய ஆளாகவே இருக்கட்டும். ஆனால் ஒருவரை அழித்து வரக்கூடாது. தான் வாழ பிறரை கெடுக்க கூடாது. மேலூர் தொகுதியில் தி.மு.க. அரசு சார்பில் பல்வேறு வளர்ச்சி பணிகளை செய்துள்ளோம். இம்முறை மேலூரில் தி.மு.க. தான் போட்டியிடும். தலைமை முடிவு செய்யும் வேட்பாளரை வெற்றி பெற செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து அவரிடம் நிருபர்கள் தே.மு.தி.க., தி.மு.க. கூட்டணிக்கு வருமா? என்று கேள்வி எழுப்பினர். அதற்கு ராஜகண்ணப்பன் தே.மு.தி.க. எல்லாம் ஒரு கட்சியா, பெரிய கட்சிகளை பற்றி கேளுங்கள் சொல்கிறேன் என்றார்.

அண்மையில் மதுரை மாவட்ட செயலாளர் தளபதி எம்.எல்.ஏ. தி.மு.க. இல்லையென்றால் இண்டியா கூட்டணியே இல்லை. காங்கிரஸ் கட்சியில் பூத் கமிட்டி போட கூட ஆள் இல்லை என்று பேசினார். இந்த பேச்சுக்கு காங்கிரஸ் கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதற்கிடையில் தி.மு.க.வுடன் கூட்டணி குறித்து தே.மு.தி.க. கூட்டணி வைக்க முயற்சிக்கும் நிலையில் அமைச்சர் ராஜகண்ணப்பன் தே.மு.தி.க. குறித்து சர்ச்சக கருத்து கூறியிருப்பது கூட்டணிக்கு முட்டுக் கட்டையை ஏற்படுத்தி உள்ளது.

# தி.மு.க. கூட்டணியில் குழப்பமும், நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது - ஆர்.பி.உதயகுமார்

**வாடிப்பட்டி, பிப்.13:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் அ.தி.மு.க சார்பில் திண்ணை பிரசாரம் நடந்தது. இதில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் கலந்து கொண்டு பேசியதாவது:-

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உண்மை பேசி பல ஆண்டுகள் ஆகிவிட்டது. 7.5 சதவீத உள் இட ஒதுக்கீட்டை கொண்டு வந்து 5 ஆயிரம் மருத்துவ மாணவர்களின் கனவை நினைவாக்கினார் எடப்பாடியார். 2011-ல் 52 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு ஜெயலலிதா மடிக்கணினி வழங்கினார். ஆனால் தற்போது தேர்தலுக்காக தி.மு.க மடிக்கணினி வழங்குவதாக கூறியுள்ளது. 525 வாக்குறுதிகள் கொடுத்தும், தி.மு.க. அரசு எதையும் நிறைவேற்ற வில்லை.

ஆனால் தற்போது பால், அரிசி, பருப்பு, மின் கட்டணம் என்று அனைத்து விலையும் உயர்ந்துவிட்டது. சொத்து வரி வீட்டு வரியை கூட அரசாணை வெளியிடாமல் உயர்த்தி விட்டார்கள். தற்போது தி.மு.க. கூட்டணியில் குழப்பமும், நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஜெயலலிதா ஆட்சியில் ஸ்காட்லாந்துக்கு நிகராக இருந்த தமிழக காவல்துறை இன்று கைகட்டி நிற்கிறது.

இலங்கையிலிருந்து கடத்தி வரப்பட்ட ரூ.9 கோடி போதைப்பொருள் பிடிபட்டுள்ளது. இன்று பள்ளி, கல்லூரி அருகில் போதைப் பொருட்கள் விற்கிறார்கள். அரசு அதை இரும்பு கரம் கொண்டு அடக்க வேண்டும். பாலியல் வன்கொடுமை தலை விரித்து ஆடுகிறது. விலைவாசியை கட்டுப்படுத்த முடியவில்லை. தி.மு.க. அரசு சொன்னது எதுவும் செய்யவில்லை. அவர்களுக்கு மக்களை பற்றியும் கவலை இல்லை. ஆனால் அ.தி.மு.க வாக்காளர்களை தெய்வமாக மதிக்கும் இயக்கம், மக்கள் நலனில் அக்கறை கொண்ட இயக்கம். அ.தி.மு.க ஆட்சிக்கு வந்தவுடன் குடும்ப அட்டை வைத்துள்ள அனைத்து மகளிருக்கும் மாதம் ரூ.2 ஆயிரம் அவரவர் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். அனைவருக்கும் வீடு அம்மா இல்ல திட்டம் மூலம் கட்டிக் கொடுக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# திமுக அரசின் அடுத்த ஊழல்!– நயினார் நாகேந்திரன்

**சென்னை, பிப்.13:** பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

வரும் 2026-27 நிதியாண்டுக்கான பட்ஜெட் இன்னும் தாக்கல் செய்யப்படாத நிலையில், முன்கூட்டியே மாநில நெடுஞ்சாலை துறைக்கு ரூ.2,000 கோடி ஒதுக்கி, திமுக அரசு அரசாணையை வெளியிட்டுள்ளது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. இது ஒருபுறமிருக்க, சென்னை பெருநகர மாநகராட்சி நிர்வாகம் நாளொன்றுக்கு சராசரியாக 40 டெண்டர்களை வெளியிட்டு, ரூ.4,000 கோடி மதிப்பிலான பணிகளை விரைந்து முடிக்க அவசரகதியில் செயல்பட்டுக் கொண்டிருப்பது பல சந்தேகங்களைக் கிளப்புகிறது.

வழக்கமாக அரசு டெண்டர்களை வெளியிட பல மாதங்களாகும் நிலையில், என்றும் இல்லாத சாதனையாக நெடுஞ்சாலை துறைக்கான டெண்டருக்கு மூன்றே நாட்களில் அரசாணை வெளியிடுவதும், பிப்ரவரி மாதத்தில் மட்டுமே சென்னை பெருநகர மாநகராட்சி 248 டெண்டர்களை வெளியிட்டிருப்பதும் எப்படி சாத்தியமாகியது? இவையெல்லாம் தேர்தலுக்கு முன் கமிஷன் கல்லா கட்ட திமுக அரசின் தந்திரமா என்பதை முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்க வேண்டும்!

நான்கரை ஆண்டுகளாக தமிழக மக்களின் வரிப்பணத்தை சுரண்டித் தின்று கொழுத்தது போதாமல், எஞ்சிய ஓரிரு மாதங்களிலும் மொத்தமாக கமிஷன் அடித்து, வாரி சுருட்டிக்கொள்ள தி.மு.க. அரசு திட்டமிடுவது என்றும் நிறைவேறாது! உண்மைகள் வெளிக்கொணரப்பட்டு, கமிஷன் ராஜ்ஜியத்திற்கு முடிவுகட்டி, விரைவில் ஊழல் மாளிகையான திமுகவிற்கு ஒட்டுமொத்தமாக தமிழக மக்கள் பூட்டு போடுவர்! என்று கூறியுள்ளார்.

# காதலர் தினத்தையொட்டி ரோஜா மலர்கள் விற்பனை அமோகம்! ஒரு பூவின் விலை... இவ்வளவா?

**ஓசூர், பிப்.13:** உலகம் முழுவதும் காதலர் தினம் பிப்ரவரி 14 ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகின்றது. காதலர்கள் தங்கள் காதலை வெளிப்படுத்தப் பெரும்பாலும் பரிசுப் பொருட்களை அளிப்பதுடன், பூக்களை (ரோஜா பூ) கொடுத்து அன்பை பரிமாறிக் கொள்வது வழக்கம்.

பூக்கள் என்றாலே பெண்களுக்குப் பிடிக்கும். அதுவும் ரோஜா பூக்கள் என்றால் சொல்லவே வேண்டாம். அதற்கு ஏற்றார் போல காதலர் தினத்தில் காதலர்கள் முதலில் தன் காதலிக்குக் கொடுப்பது ரோஜா மலர்களேயாகும்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் பகுதி ரோஜா மலர் உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற பகுதியாகும். இங்கு ரோஜா உற்பத்திக்கு ஏற்ற வகையில் நல்ல சீதோஷ்ண நிலை நிலவுகிறது. ஓசூர், பேரிகை, பாகலூர், கெலமங்கலம், தளி ஆகிய இடங்களில் சுமார் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் ரோஜா மலர்கள் விளைவிக்கப்படுகிறது. குறிப்பாக பேரிகை பகுதியில் மொத்த உற்பத்தியில் 50 சதவிகிதம் ரோஜா மலர்கள் விளைவிக்கப்பட்டு வருகின்றன. ரோஜா சாகுபடியாளர்கள் பல லட்சம் செலவில், பசுமைக்குடில்கள் அமைத்தும், தோட்டங்களிலும் மலர்களை உற்பத்தி செய்து வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேரிடையாகவும், மறைமுகமாகவும் விவசாயிகள், ஆண், பெண் தொழிலாளர்கள், ரோஜா மலர் கொள்முதல் செய்வோர், மலர் வியாபாரிகள் என சுமார் 2 லட்சம் பேர் இதில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பகுதியில், தாஜ்மகால், ரோடோஸ், நோப்ளாஸ், கோல்டு ஸ்டிரைக், சவரன், அவலஞ்சர், பேர்னியர், கார்வெட், டிராபிக்கல் அமேசான் உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட ரோஜா வகைகள் விளைவிக்கப்பட்டு வருகின்றன.



மேலும், கடந்த ஆண்டுகளில் பலத்த வரவேற்பை பெற்ற தாஜ்மகால் வகை சிகப்பு ரோஜா மலருக்கு இந்தாண்டும் கடும் கிராக்கி ஏற்பட்டு, அமோக வரவேற்பை பெற்றுள்ளது.

ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு ரோஜா மலர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. ஆனபோதிலும் காதலர் தின கொண்டாட்டத்திற்கு மட்டுமே அதிகளவில் ரோஜா மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இந்தாண்டு, பருவ நிலை மாற்றம் காரணமாக ரோஜா மலர் உற்பத்தி குறைந்து சுமார் 80 லட்சம் மலர்களே உற்பத்தி ஆனது. அதில் கடந்த 10-ந்தேதி வரை சுமார் 20 லட்சம் மலர்கள் ஏற்றுமதி ஆனது. துபாய் உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கும், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், லெபனான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ரோஜா மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக மலர் சாகுபடியாளர்கள் தெரிவித்தனர்.

இந்தாண்டு கடந்த ஆண்டுகளை விட அதிகளவில் மலர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், இந்தியா மட்டுமின்றி உலகளவிலும் பருவ நிலை மாற்றம், கடும் பனி மற்றும் குளிர்கால நோய்கள் ரோஜா செடிகளை தாக்கியதால், ரோஜா மலர்கள் உற்பத்தி குறைந்து போனது. குறைந்த அளவிலான மலர்களே ஏற்றுமதி ஆன போதிலும் நல்ல விலை கிடைத்திருப்பதால், ரோஜா மலர் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதனிடையே, காதலர் தினத்திற்கு மட்டுமின்றி, சுப நிகழ்ச்சிகள், மகாசிவராத்திரி உள்ளிட்ட மற்ற கொண்டாட்டங்களுக்கும் அதிகளவில் ரோஜா பூக்கள் தேவைப்படுவதால் உள்ளூர் சந்தையில், நல்ல வரவேற்பு கூடுதல் விலை மற்றும் உடனடியாக பணம் கிடைத்து வருவதால் உள்ளூர் விற்பனைக்கு, மலர் சாகுபடியாளர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அந்த வகையில் பூ மார்க்கெட்டில் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஏராளமான ரோஜா பூக்கள் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

குறிப்பாக, தாஜ்மஹால் ரோஜா, பட்டர் ரோஜா, சிவப்பு, மஞ்சள், வெள்ளை, டபுள் ஷேடு ரோஜாக்கள் என பல வண்ணங்கள் ரோஜாப் பூக்கள் விற்பனைக்கு வந்து உள்ளன.

நேற்றைய நிலவரப்படி 20 மலர்கள் அடங்கிய கொத்து ரூ.650 முதல் ரூ.700 வரை விற்கப்பட்டது. ரோஜா மலர் உற்பத்தியில் சரிவு ஏற்பட்டிருப்பதால், ஒரு மலரின் விலை ரூ.25 முதல் 35 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதன் மூலம், உற்பத்தியாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நல்ல லாபம் கிடைத்துள்ளது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தரமான ஒரு மலரின் விலை ரூ.50 முதல் ரூ.55 என சாகுபடியாளர்கள் கூறினர்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com